உப்பாறு அணையி–ருந்து பாசனத்துக்கு தண்ணீர் திறப்பு

First Published : 23 Jan 2011 10:09:34 AM IST

தாராபுரம், ஜன. 22: தாராபுரம் அருகிலுள்ள உப்பாறு அணையிலிருந்து பாசனத்துக்குத் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது.

தாராபுரம் அருகிலுள்ள உப்பாறு அணை, அண்மையில் பெய்த மழையால் நிரம்பிய நிலையில் உள்ளது. இதையடுத்து பாசனத்துக்குத் தண்ணீர் திறக்க அரசு உத்தரவிட்டுள்ளது.

நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் வெள்ளக்கோவில் சாமிநாதன், உப்பாறு அணையிலிருந்து பாசனத்துக்குத் தண்ணீர் திறந்து விட்டார். இந்நிகழ்ச்சிக்கு திருப்பூர் மாவட்ட ஆட்சியர் சமயமூர்த்தி தலைமை வகித்தார். தாராபுரம் எம்எல்ஏ பிரபாவதி பெரியசாமி, மத்திய தென்னை வளர்ச்சி வாரியக் குழு உறுப்பினர் செல்லமுத்து, பாசன விவசாயிகள் சங்கத் தலைவர் திருஞானசம்பந்தம், தாராபுரம் கோட்டாட்சியர் அழகுமீனா, பொதுப்பணித்துறை செயற் பொறியாளர் பன்னீர்செல்வம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். உப்பாறு அணையின் வலது கரைக் கால்வாய் மூலம் 70 கனஅடியும், இடது கரைக் கால்வாய் மூலம் 105 கனஅடியும் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. வரும் மார்ச் 20-ம் தேதி வரை தண்ணீர் விடப்படும். முறை வைத்து பாசனத்துக்குத் தண்ணீர் விடப்படும். இதன் மூலம் சுமார் 6,050 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறுகிறது.

இதன்மூலம் வேலாயுதம்பாளையம், கெத்தல்ரேவ், தொப்பம்பட்டி, நஞ்சியம்பாளையம், சூரியநல்லூர், கண்ணாங்கோயில், சங்கரண்டாம்பாளையம், புத்தூர் ஆகிய 8 ஊராட்சிகளைச் சேர்ந்த 53 கிராமங்களில் உள்ள விவசாய நிலங்கள் பாசன வசதி பெறுவதுடன், நிலத்தடி நீர்மட்டம் உயரவும் வாய்ப்புள்ளது.

தமிழகத்தில் 20 ஆண்டுகளாக வேளாண்துறை புறக்கணிப்பு: வேளாண் பட்டதாரிகள் புகார்

First Published : 23 Jan 2011 09:29:54 AM IST

சிதம்பரம், ஜன. 22: தமிழக அரசு வேளாண்துறையில் 90 சதவீத பணியிடங்கள் நிரப்பப்படவில்லை. கடந்த 20 ஆண்டுகளாக வேளாண்துறை புறக்கணிக்கப்பட்டு வருகிறது என அனைத்து வேளாண் பட்டாதாரிகள் சங்கம் குற்றம்சாட்டியுள்ளது.

÷இது குறித்து அச்சங்க மாநிலத் தலைவர் கா.பசுமைவளவன் சிதம்பரத்தில் சனிக்கிழமை தெரிவித்தது: தமிழகத்தில் விளைநிலங்கள் வீட்டுமனைகளாகவும், பன்னாட்டு நிறுவனங்களின் தொழிற்சாலைகளுக்காக தாரை வார்க்கப்பட்டு வருகிறது.

÷இதனால் வேளாண் தொழில் அழியும் நிலை உருவாகி உணவு பஞ்சம் ஏற்படும். எனவே விளைநிலங்களை விற்பதைத் தடுக்க அரசு சட்டம் கொண்டு வர வேண்டும்.

÷அமெரிக்கா உள்ளிட்ட பன்னாடுகளில் தடை செய்யப்பட்ட எனடோசல்மான், டிடிடி போன்ற மருந்துகள் இந்தியாவில் கொள்ளைப் புறமாக விற்கப்பட்டு வருகிறது.

÷தமிழகத்தில் 3 ஆண்டுகளில் 933 கிராமப்புற வேளாண் கூட்டுறவு வங்கிகள் மூடப்பட்டுள்ளன.

÷தமிழகத்தில் 14 ஆயிரம் வேளாண் பட்டதாரிகள் வேலைவாய்ப்புக்காக காத்திருக்கின்றனர். ஆனால் காலியாக உள்ள பணியிடங்களை அரசு நிரப்பவில்லை.

÷அனைத்து பள்ளிகளிலும் வேளாண்மை அடிப்படை பாடமாகக் கொண்டு வரப்படும் என திமுக அரசு பதவி ஏற்றவுடன் சட்டமன்றத்தில் 4.8.2006-ல் வேளாண்துறை அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம் அறிவித்தார்.

÷இதை நடைமுறைப்படுத்தி வேளாண்மை மற்றும் தோட்டக்கலை பட்டதாரிகள் பதவி மூப்பு அடிப்படையில் ஆசிரியர் பணிநியமனம் செய்ய வேண்டும்.

÷தமிழக அரசு ஆசிரியர் தேர்வு வாரியத்தின் மூலம் 30.6.2009-ல் வேளாண் பட்டதாரி ஆசிரியர் பணிக்கு 200 பேர் சான்றிதழ் சரிபார்த்தல் நடைபெற்றது.

÷அவர்களுக்கு உடனடியாக பணி நியமனம் செய்ய வேண்டும். வேளாண் பட்டதாரிகளின் வாழ்வுரிமையான தமிழ்நாடு வேளாண் மன்றம் நிலுவையில் உள்ளதை சில திருத்தங்கள் செய்து நடைமுறைபடுத்த வேண்டும்.

÷மேற்கண்ட கோரிக்கைகளை வலியுறுத்தி வருகிற ஜனவரி 28-ம் தேதி சென்னை அண்ணாசாலை காயிதேமில்லத் மணி மண்டபம் முன்பு முதல்வரின் கவனத்தை ஈர்க்கும் போராட்டமாக உண்ணாவிரதப் போராட்டம் நடத்தப்படவுள்ளது.

÷அதன் பின்னரும் கோரிக்கைகள் நிறைவேற்றப்படாவிடல் தமிழகத்தில் உள்ள வேளாண் கல்லூரிகளில் தொடர் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தப்படும் என கா.பசுமைவளவன் தெரிவித்தார்.

÷அப்போது மாநிலப் பொருளர் ப.உதயகுமார், மாவட்டத் தலைவர்கள் கே.சத்தியநாராயணன், கே.முத்துக்குமரன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

**நிலமும் இல்லை; வேலையும் இல்லை: தவிக்கும் 2,000 தோட்டத் தொழிலாளர்களின் அவலநிலை**

First Published : 23 Jan 2011 09:27:40 AM IST

கடலூர், ஜன. 22: இந்திய அரசு இலங்கை அரசுடன் செய்து கொண்ட ஒப்பந்தப்படி, தமிழகத்துக்கு அழைத்து வரப்பட்ட இலங்கை தோட்டத் தொழிலாளர்களுக்கு, அரசு ஒப்பந்தப்படி நிலமும் அளிக்காமல், வேலையும் அளிக்காமல், அலைக்கழிக்கப்படுவதால், கூலி வேலைக்குச் சென்று பிழைக்கும் அவல நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

÷60 ஆண்டுகளுக்கு முன்னர், இலங்கை- தமிழகம் இடையே எவ்விதக் கட்டுப்பாடுகளும் இல்லை. இதனால் தமிழகத்தைச் சேர்ந்த பலர், இலங்கை சென்று, காடுகளையும் மலைகளையும் திருத்தி, தேயிலை, காபித் தோட்டங்களை உருவாக்கினர்.

÷தோட்டத் தொழிலாளர்கள் என்று அழைக்கப்பட்ட இவர்களை, இலங்கையில் உள்ள பூர்வீகத் தமிழர்கள் என்று சொல்லிக் கொண்டவர்கள் கூட, மாறுபாட்டுடன் பார்த்தனர்.

÷இதன் காரணமாக 1 லட்சம் தோட்டத் தொழிலாளர்களை (இலங்கையில் பல்வேறு பகுதிகளில் வசித்த தமிழர்கள்) தமிழகத்துக்கு அனுப்ப இந்திய அரசு ஸ்ரீமாவோ பண்டார நாயகாவுடன் செய்து கொண்ட ஒப்பந்தப்படி தமிழகத்துக்கு அனுப்பப்பட்டனர். இவர்கள் தமிழகத்தில் பல்வேறு இடங்களில் குடியமர்த்தப்பட்டனர்.

÷நெய்வேலி பகுதியில் 637 குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டனர். இவர்களுக்கு அப்போதைய மத்திய அரசு ரூ.1 கோடி நிதியும், மாநில அரசு ரூ.5 லட்சமும் வழங்கியது. ÷நெய்வேலி அருகே 1,174 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டு, அதில் பழத் தோட்டம் அமைக்கப்பட்டது.

÷இதில் பணிபுரிய தோட்டத் தொழிலாளர் குடும்பங்களுக்கு பயிற்சியும் அளிக்கப்பட்டது. பயிற்சி முடிந்ததும் ஒவ்வொரு குடும்பத்துக்கும் 3 ஏக்கர் நிலமும், குடும்பத்தில் ஒருவருக்கு என்.எல்.சி. நிறுவனத்தில் வேலையும் வழங்குவதாக உறுதி அளிக்கப்பட்டது.

÷ஆனால் இவ்விரண்டையும் அந்த மக்களுக்கு இன்று வரை, அரசு வழங்கவில்லை என்பதுதான் வேதனை அளிக்கும் விஷயம். என்.எல்.சி.யில் வெறும் 4 பேருக்கு மட்டும் வேலை வழங்கப்பட்டது. அதுவும் அகதிகள் என்றல்ல. திறமை அடிப்படையில்தான் வழங்கப்பட்டதாம்.

÷1980-ம் ஆண்டு 1,174 ஏக்கர் நிலத்தில் உருவாக்கப்பட்ட விவசாயப் பண்ணை நஷ்டத்தில் இயங்கியதாகக் கூறி மூடப்பட்டது. அதைத் தொடர்ந்து பிழைப்புக்காக அவர்களுக்கு எந்த ஏற்பாட்டையும் அரசு செய்ய வில்லை.

÷எனவே அவர்கள் 1987-ல் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தனர். மத்திய அரசு ஏற்படுத்திக் கொண்ட ஒப்பந்தப்படி, தமிழகம் வந்த இலங்கை அகதிகளுக்கு, உறுதி அளித்தபடி 3 ஏக்கர் நிலம் மற்றும் குடும்பத்தில் ஒருவருக்கு வேலை வழங்க வேண்டும் என்று உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது. ஆனால் நீதிமன்ற உத்தரவும் இதுவரை நிறைவேற்றப்படவில்லை.

÷இந்த நிலையில் 1982-க்குப் பிறகு இலங்கை அகதிகளுக்கு ஒதுக்கப்பட்ட நிலத்தில் ஒரு பகுதி, தனியாருக்கு குத்தகைக்கு விடப்பட்டு விட்டது என்றும், நிலத்தில் 637 ஏக்கரை என்.எல்.சி. நிறுவனம் எடுத்துக் கொண்டது.

÷அதற்கு இழப்பீடாக என்.எல்.சி. வழங்கிய ரூ.40 கோடியும் அரசிடம் இருப்பதாக தாயகம் திரும்பிய மக்கள் நலச் சங்க சட்ட ஆலோசகர் எம்.கே.குணசேகரன் தெரிவிக்கிறார்.

÷மத்திய அரசு இலங்கை அரசுடன் செய்து கொண்ட ஒப்பந்தப்படி தாயகம் திரும்பிய இலங்கைத் தமிழர்களுக்கு, ரேஷன் கார்டு வழங்கப்பட்டு உள்ளது.

÷அனைத்து தேர்தல்களிலும் வாக்களிக்கிறார்கள். அனைத்து அரசியல் கட்சிகளும், தேர்தல் நேரத்தில் வருவதும் வாக்குறுதிகளை அள்ளி வீசுவதும் வாடிக்கையாகி விட்டது, அகதிகளாக வந்தவர்களின் வாழ்வில்தான், விடியலைக் காண முடியவில்லை என்கிறார் குணசேகரன்.

÷737 குடும்பங்களாகத் தாயகம் திரும்பி, நெய்வேலி அருகே குடியமர்த்தப்பட்ட இவர்கள் 2 ஆயிரம் குடும்பங்களாக, 10 ஆயிரம் மக்கள்தொகையாக விரிவடைந்து இருக்கிறார்கள், ஆனால் அவர்களின் வாழ்க்கைத் தரம் விரிவடைய வில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

ஆட்சியரிடம் மனு

÷எனவே பாதிக்கப்பட்ட மக்கள் 500 பேர் அண்மையில் கடலூருக்குத் திரண்டு வந்து மாவட்ட ஆட்சியரைச் சந்தித்து கோரிக்கை மனு அளித்து உள்ளனர்.

÷நீதிமன்ற உத்தரவுப்படியும், மத்திய அரசின் ஒப்பந்தப்படியும் உதவிகளை வழங்காவிட்டால், ரேஷன் அட்டைகளை அரசிடம் ஒப்படைப்போம், தேர்தலைப் புறக்கணிப்போம் என்றும் மனுவில் தெரிவித்து உள்ளனர்.

**விவசாயிகளுக்கு பயிற்சி**

First Published : 23 Jan 2011 09:33:21 AM IST

மதுராந்தகம்,ஜன.22: அச்சிறுபாக்கம் வட்டார வேளாண்மை அலுவலகம் சார்பில் தீட்டாளம் ஊராட்சியில் விதை கிராம திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கான பயிற்சி முகாம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

÷முகாமில்,வேளாண்மை உதவி இயக்குநர் வெங்கட்ட சுப்பிரமணியன் நெல் உற்பத்திக்கு தரமான விதைகளை தேர்வு செய்தல், குறித்து எடுத்துரைத்தார்.ஜ்÷மேலும்,முகாமில் பங்கேற்ற விவசாயிகள் 100 பேருக்கு உழவர் அடையாள அட்டை வழங்கினார். முகாமிற்கு ஊராட்சிமன்ற தலைவர் வரலட்சுமி தலைமை தாங்கினார்.

**முட்டை விலை**

First Published : 23 Jan 2011 10:58:33 AM IST

நாமக்கல், ஜன.22: நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு சனிக்கிழமை அறிவித்தபடி, முட்டையின் பண்ணைக் கொள்முதல் விலை முட்டை ஒன்றுக்கு நாமக்கல்லில் ரூ. 2.82, சென்னையில் ரூ. 2.88.

கறிக்கோழி விலை

பல்லடம் பிராய்லர்ஸ் ஒருங்கிணைப்புக் குழு சனிக்கிழமை அறிவித்தபடி, கறிக்கோழியின் பண்ணைக் கொள்முதல் விலை கிலோ ரூ.48, முட்டைக் கோழி
கிலோ ரூ. 30.

**"மழையால் சேதமடைந்த பயிர்களுக்கு ரூ. 24 கோடி ஒதுக்கீடு'**

First Published : 23 Jan 2011 11:46:48 AM IST

ராமநாதபுரம், ஜன. 22: ராமநாதபுரம் மாவட்டத்தில் மழையால் சேதமடைந்த பயிர்களுக்கு ஈடாக, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வழங்க ரூ. 24 கோடி ஒதுக்கப்பட்டுள்ளதாக, தமிழக குடிசை மாற்று வாரிய அமைச்சர் சுப. தங்கவேலன் வெள்ளிக்கிழமை தெரிவித்தார்.

ராமநாதபுரம் சுவார்ட்ஸ் மேல்நிலைப் பள்ளியில், செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் நடைபெற்ற பல்துறைப் பணி விளக்கமுகாம் மற்றும் கண்காட்சியைத் திறந்துவைத்து, அமைச்சர் பேசியதாவது:

விவசாயிகளுக்குத் தேவையான உதவிகளை முன்கூட்டியே ஆராய்ந்து செய்ய அரசு தயாராக உள்ளது.

மாவட்டத்தில் 104 மருத்துவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் அனைவரும் ராமநாதபுரத்தைச் சேர்ந்தவர்களாக நியமிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார் அமைச்சர் சுப.தங்கவேலன்.

விழாவில், 63 பயனாளிகளுக்கு ரூ. 11 லட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை அமைச்சர் வழங்கி, அரசின் நான்கரை ஆண்டு சாதனை மலரை வெளியிட, அதனை ஆட்சியர் த.ந.ஹரிஹரன் பெற்றுக் கொண்டார்.

முன்னதாக, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் சி.செல்வராஜ் வரவேற்றார்.

கே.ஹசன்அலி எம்.எல்.ஏ, மாவட்ட ஊராட்சிக்குழுத் தலைவர் ஆ.ரவிச்சந்திர ராமவன்னி,மாவட்ட வருவாய் அதிகாரி கி.பாலசுப்பிரமணியம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

விழாவில் பனைத் தொழிலாளர் நலவாரிய உறுப்பினர் எஸ்.சிவலிங்கம் உள்பட பல்வேறு துறை அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

விழா ஏற்பாடுகளை செய்தி மக்கள் தொடர்புத்துறை அலுவலர் சி.செல்வராஜ் தலைமையிலான அலுவலர்கள் செய்திருந்தனர்.

**மேட்டூர் அணை நீர்மட்டம்: 111.26 அடி**

First Published : 23 Jan 2011 12:01:25 PM IST

தஞ்சாவூர், ஜன. 22: மேட்டூர் அணையின் நீர்மட்டம் சனிக்கிழமை மாலை 111.26 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 1,555 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து வினாடிக்கு 8,003 கன அடி தண்ணீர் திறந்து விடப்படுகிறது. கல்லணையிலிருந்து காவிரியில் வினாடிக்கு 606 கன அடி, வெண்ணாற்றில் வினாடிக்கு 5,003 கன அடி, கல்லணைக் கால்வாயில் வினாடிக்கு 1,500 கன அடி, கொள்ளிடத்தில் வினாடிக்கு 304 கன அடி தண்ணீர் திறந்துவிடப்படுகிறது.

**கரும்பு, நெல், பாலுக்கு உரிய விலை வழங்க உழவர் உழைப்பாளர் கட்சி வலியுறுத்தல்**

First Published : 23 Jan 2011 12:30:03 PM IST

திருவண்ணாமலை, ஜன. 22: கரும்பு, நெல், பால் கொள்முதலுக்கு உரிய விலையை அரசு வழங்க வேண்டும் என உழவர் உழைப்பாளர் கட்சி வலியுறுத்தி உள்ளது.

திருவண்ணாமலையில் சனிக்கிழமை நடைபெற்ற கட்சியின் மாவட்ட செயற்குழுக் கூட்டத்தில், இக்கோரிக்கை வலியுறுத்தப்பட்டது.

தீர்மானங்கள்:

திருவண்ணாமலையில் பிப். 6-ம் தேதி கட்சியின் நிறுவனர் நாராயணசாமி நாயுடுவின் 88-வது பிறந்த நாள் விழாவை நடத்துவது, வீட்டுவசதி கூட்டுறவு சங்கங்கள் மூலம் பெற்ற கடன்களை ரத்து செய்ய வேண்டும். விவசாயிகளுக்கு 4 சதவீத வட்டியில் வீடு கட்ட கடன் தர வேண்டும். கலைஞர் வீடு வழங்கும் திட்டத்தில் வீடு கட்ட ரூ.2 லட்சம் கடன் வழங்க வேண்டும், அறுவடைக்காக கரும்பு வெட்டும் இயந்திரங்களை உடனே தருவிக்க வேண்டும். விவசாயிகள் கால்நடை பண்ணை, மூலிகை பண்ணை அமைக்க கடனுதவி புரிய வேண்டும். இலவச மின்சாரம் கோரி காத்திருப்போருக்கும் உடனே இணைப்பு தர வேண்டும். தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகம் மூலம் அனைத்து மாவட்டங்களிலும் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களை அமைக்க வேண்டும், சொத்துரிமை பதிவேடுகள் நிரந்தரமான எளிமையான முறையில் கிடைக்க வழி செய்ய வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.

கூட்டத்துக்கு சங்கத்தின் மாவட்டத் தலைவர் வி.சுப்பிரமணியம் தலைமை தாங்கினார்.

மாநிலத் தலைவர் கே.செல்லமுத்து, நிர்வாகிகள் ஈட்டிமுனை குப்புசாமி, இளங்கோவன், ஜீவா கிட்டு, மாவட்டச் செயலர் வி.சந்திரன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

**வெங்காயத்துக்குப் பதிலாக ஆம்லெட்டில் முட்டைகோஸ்**

First Published : 23 Jan 2011 11:21:01 AM IST

வத்தலகுண்டு, ஜன. 22: திண்டுக்கல் மாவட்டம், வத்தலகுண்டில் சில மாலை நேர அசைவ உணவகங்களில் ஆம்லெட்டில் வெங்காயத்துக்குப் பதிலாக முட்டைகோஸ் பயன்படுத்தப்படுகிறது.

அன்றாடம் பயன்படுத்தப்படும் சமையல் காய்கறிகளில் முக்கிய இடம் வகிக்கும் வெங்காயம், சமீபகாலமாக கடுமையாக விலை உயர்ந்திருப்பதால், சில மாலை நேர அசைவ உணவகங்களில் வெங்காயம் பயன்படுத்தாமல் பிளைன் ஆம்லெட் போடப்படுகிறது. இதனால், வாடிக்கையாளர்கள் திருப்தி அடையாமல் இருந்து வந்தனர்.

இந்நிலையில், ஆம்லெட்டில் வெங்காயத்துக்குப் பதிலாக முட்டைகோஃஸ சில கடைகளில் பயன்படுத்துகின்றனர். பிளைன் ஆம்லெட்டுக்கு இது பரவாயில்லைதான் என வாடிக்கையாளர்கள் கூறுவதாக, உணவக உரிமையாளர் ஒருவர் தெரிவித்தார்.

**உளுந்து சாகுபடியில் உயர் தொழில்நுட்பங்கள் குறித்த பயிற்சி**

First Published : 23 Jan 2011 09:32:27 AM IST

திண்டிவனம், ஜன. 22: திண்டிவனம் வேளாண்மை அறிவியல் நிலையத்தின் சார்பில் நல்லாவூர் உபவடிப் பாசனப் பகுதியில் செயல்படுத்தப்படும் நீர்வள நில வளத்திட்டத்தின் கீழ் உளுந்து சாகுபடியில் உயர் தொழில்நுட்பங்கள் குறித்த பயிற்சியும் செயல்விளக்கமும் அண்மையில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது.

÷வானூர் வட்டம் ஒழிந்தியாப்பட்டு கிராமத்தில் உள்ள சுப்பிரமணியின் வயலில் நடத்தப்பட்ட பயிற்சி மற்றும் செயல்விளக்கத்துக்கு நிலையத் தலைவர் பேராசிரியர் முனைவர் ந.சாத்தையா தலைமை தாங்கினார்.

÷பயிற்சியின்போது விவசாயிகளிடம் அவர் கூறியது: உளுந்து பயிரில் அதிக விளைச்சலும் வருமானமும் பெற வைப்பதற்கே இந்த பயிற்சி விவசாயிகளுக்கு அளிக்கப்படுகிறது.

÷இதற்கு சரியான பயிர் எண்ணிக்கையை பராமரிப்பது மிகவும் அவசியம். விதைப்புக் கருவி கொண்டு விதைக்கும்போது குறைவான நேரத்தில் அதிக பரப்பளவில் விதைக்கவும், ப யிர் எண்ணிக்கையை பராமரிக்க முடியும் எனவும் கூறினார்.

÷இக்கருவி மூலம் வரிசைக்கு வரிசை 30 செ.மீ. இடைவெளியும் செடிக்கு 10 செ.மீ. இடைவெளி என்ற அளவில் விதைப்பை மேற்கொள்ள முடியும்.

÷இக்கருவி மூலம் ஒரு நாளைக்கு 7-8 ஏக்கர் வரை விதைக்க முடியும். இக்கருவி விவசாயிகளுக்கு வரப்பிரசாதமாக அமையுமென்றும், ஒரு நாளைக்கு ரூ.1,000 வாடகைக்கு விவசாயிகளுக்கு அனுப்பப்படுவதாகவும் கூறினார். எனவே இக்கருவி தேவைப்படும் விவசாயிகள் பேராசிரியர் மற்றும் தலைவர் எண்ணெய் வித்துக்கள் ஆராய்ச்சி நிலையம், திண்டிவனம் என்ற முகவரியில் தொடர்பு கொண்டு பயனடையலாம் என்று அறிவியல் நிலைய இணைபேராசிரியர் முனைவர் கி.பூர்ணிமா கூறினார்.

÷இந்நிகழ்ச்சியில் திட்ட விஞ்ஞானி ப.சி.பிரபு செயல்முறை விளக்கம் அளித்தார். இப்பயிற்சியில் உயர் விதை நேர்த்தி, இயந்திரம் மூலம் வரிசை விதைப்பு போன்ற செயல்விளக்கங்கள் வயலில் விவசாயிகளுக்கு நடத்தப்பட்டது. பயிற்சியின் இறுதியில் உளுந்து சாகுபடியில் அதிக விளைச்சல் பெற்றிட 10 உயர் தொழில்நுட்பங்களை வேளாண்மை அறிவியல் நிலையத் தலைவர் முனைவர் ந.சாத்தையா தெரிவித்தார்.

÷பருவத்துக்கேற்ற உயர் விளைச்சல் ரகங்கள், தரமான மற்றும் முளைப்புத்திறன் உள்ள விதைகளை தயார் செய்தல், விதை நேர்த்தி செய்தல், பயிர் எண்ணிக்கையை பராமரிப்பு செய்தல் (சதுர மீட்டருக்கு 33 செடி), சரியான விதையளவை கடைபிடித்து வரிசை விதைப்பு செய்தல், சீரிய உர மேலாண்மையை பின்பற்றுதல், இலை வழி மேலாண்மையை பின்பற்றுதல், ஒருங்கிணைந்த களை மேலாண்மை பின்பற்றுதல், ஒருங்கிணைந்த பூச்சி மற்றும் நோய் மேலாண்மை முறைகளை கடைபிடித்தல், பண்ணை இயந்திரங்களை உபயோகித்தல் போன்றதாகும்.

÷இப்பயிற்சியை வட்டார ஆராய்ச்சியாளர்கள் ஆறுமுகம் மற்றும் இளங்கோ ஆகியோர் ஏற்பாடு செய்திருந்தனர்.

**பசுந்தேயிலைக்கு மானியம் அங்கத்தினர்கள் நலச்சங்கம் கோரிக்கை**

First Published : 23 Jan 2011 10:08:12 AM IST

மஞ்சூர், ஜன. 22: சிறு, குறு தேயிலை விவசாயிகளின் நலன் காக்க பசுந்தேயிலைக்கு மானியம் வழங்க வேண்டும் என்று மஞ்சூர் இண்ட்கோ அங்கத்தினர்கள் நலச்சங்கம் தமிழக அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளது.

சங்கத் தலைவர் நீலகிரி வாசுதேவன் முதலமைச்சருக்கு சனிக்கிழமை அனுப்பியுள்ள கோரிக்கை மனு:

நீலகிரி மாவட்டத்தின் ஜீவாதாரத் தொழிலான தேயிலை விவசாயத்தில் 70 சதவீத மக்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

இவர்களில் பெரும்பாலானவர்கள் சிறு, குறு தேயிலை விவசாயிகள். விவசாயிகளின் நலன் கருதி 15 கூட்டுறவுத் தேயிலை ஆலைகள் தமிழக அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இது தவிர நூற்றுக்கும் மேற்பட்ட தனியார் தேயிலை ஆலைகளும் உள்ளன. கூட்டுறவு ஆலைகளை விட, தனியார் ஆலைகள் பசுந்தேயிலைக்கு ரூ. 2 முதல் 4 வரை கூடுதலாக விலை கொடுக்கின்றன.

கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக பசுந்தேயிலைக்கு உரிய விலை கிடைக்காமல் அவதிப்பட்டுவரும் சிறு, குறு விவசாயிகளுக்கு இந்த விலை வித்தியாசத்தால் பெருமளவு இழப்பு ஏற்பட்டு வருகிறது.

எனவே, தனியார் ஆலைகளுக்கு இணையாக கூட்டுறவு ஆலைகளிலும் பசுந்தேயிலைக்கு விலை வழங்க வேண்டும் என்று நீண்ட நாட்களாக விவசாயிகள் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

இந்நிலையில், கடந்த மாதம் கோவையில் சிறு, குறு தேயிலை விவசாயிகளிடம் ஆலோசனை நடத்திய ஊரகத் தொழில்துறை அமைச்சர் பொங்கலூர் நா. பழனிச்சாமி தனியார் ஆலைகளுக்கு இணையாக கூட்டுறவு ஆலைகளிலும் விலை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதியளித்தார்.

ஆனாலும், தனியார் மற்றும் கூட்டுறவு தேயிலை ஆலைகளுக்கு இடையிலான விலை வித்தியாசம் அதே நிலையில் உள்ளது. இதனால், மாவட்டத்தில் உள்ள சிறு, குறு விவசாயிகளின் வாழ்வாதாரம் கேள்விக்குறியாகி வருகிறது.

எனவே, தேயிலை விவசாயிகளின் நலன் கருதி பசுந்தேயிலைக்கு உரிய விலை கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதுவரை தாற்காலிக தீர்வாக விவசாயிகளுக்கு மானியம் வழங்க வேண்டும்.

**விவசாயிகளுக்கு எண்ணெய் வித்துகள் சாகுபடி பயிற்சி**

First Published : 23 Jan 2011 12:00:37 PM IST

அரவக்குறிச்சி, ஜன. 22: அரவக்குறிச்சி ஒன்றியம், சேந்தமங்கலம் (மேற்கு) ஊராட்சி நவாமரத்துப்பட்டியில் விவசாயிகளுக்கான எண்ணெய் வித்துகள் சாகுபடி குறித்த பயிற்சி வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இதில் மத்திய திட்டங்கள், இயற்கை வேளாண்மை குறித்து கரூர் வேளாண் இணை இயக்குநர்(மத்திய திட்டங்கள்) கோ. சௌந்தரம், நிலக்கடலை சாகுபடியில் நவீன தொழில்நுட்பம் குறித்து வட்டார வேளாண் உதவி இயக்குநர் வெ. கந்தசாமி ஆகியோர் விளக்கினர்.

மண், நீர் மாதிரி எடுக்கும் முறைகள் மற்றும் முக்கியத்துவம் குறித்துகரூர் மண் பரிசோதனை நிலைய வேளாண் அலுவலர் கௌசிகாதேவி, தோட்டக்கலைத் துறையில் நிகழாண்டு செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து வட்டார தோட்டக்கலை அலுவலர் சௌந்திரம்மாள், நிகழாண்டில் அரவக்குறிச்சி வட்டாரத்தில் நடைமுறைபடுத்தப்படும் திட்டங்கள் குறித்து துணை வேளாண் அலுவலர் ராஜேந்திரன் ஆகியோர் பேசினர். மேலும், எண்ணெய் வித்து பயிர்களைத் தாக்கும் பூச்சிகள், நோய்கள், அதனை கட்டுப்படுத்தும் முறைகள் குறித்து அரவக்குறிச்சி வட்டார வேளாண் அலுவலர் க. வெங்கடேசன் விளக்கினார்.

பயிற்சியில் பங்கேற்ற விவசாயிகளுக்கு எண்ணெய் வித்துகள் சாகுபடி தொழில்நுட்பங்கள் குறித்த துண்டுப் பிரசுரம் வழங்கப்பட்டது.

தொடர்ந்து விவசாயி செல்லப்ப கவுண்டர் வயலில் நிலக்கடலை பயிருக்கு ஜிப்சம் இடுதல் குறித்த செயல் விளக்கம் நடைபெற்றது.

பயிற்சிக்கு சேந்தமங்கலம் ஊராட்சி மன்றத் தலைவர் நஞ்சுண்டேஸ்வரன் முன்னிலை வகித்தார். கரூர் உழவர் பயிற்சி நிலைய வேளாண் துணை இயக்குநர் ஆர்.ஜி. ராதாகிருஷ்ணன் வரவேற்றார். வேளாண் அலுவலர் மோகன்குமார் நன்றி கூறினார்.

பயிற்சிக்கான ஏற்பாடுகளை உதவி வேளாண் அலுவலர்கள் முத்துச்செல்வன் ராஜேஷ்கண்ணன், சதீஸ் ஆகியோர் செய்திருந்தனர்.

**விவசாயிகளிடம் குறைகேட்ட நாடாளுமன்ற நிலைக் குழு**

First Published : 23 Jan 2011 09:34:36 AM IST

திருத்தணி, ஜன. 22: தரமான முறையில், அரசு வழங்கும் மானிய விலையில் உரங்கள் கிடைக்கிறதா என மத்திய உரம், ரசாயனத் துறை அமைச்சகத்துக்கான நாடாளுமன்ற நிலைக் குழுவினர் விவசாயிகளிடம் குறைகளை சனிக்கிழமை கேட்டறிந்தனர்.

÷திருத்தணி அடுத்துள்ள கனகம்மாசத்திரத்தில் விவசாயிகளுக்கான கருத்தரங்கு நடைபெற்றது. இதில் உரம், ரசாயனத் துறை அமைச்சகத்துக்கான நாடாளுமன்ற நிலைக்குழுத் தலைவர் கோபிநாத் மோடி எம்.பி., தலைமையில் 14 எம்.பி.க்கள் விவசாயிகளிடம் குறைகளை கேட்டறிந்தனர்.

÷அரசு அனுமதி பெற்ற விற்பனையாளர்கள் விவசாயிகளுக்கு சரியான தள்ளுபடி விலையில் உரங்களை விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறதா எனவும் கேட்டறிந்தனர்.

÷விவசாயிகளின் கேள்விகளுக்கு பதிலளித்து கோபிநாத் மோடி எம்.பி., கூறியது:

இங்கு வந்துள்ள விவசாயிகள் அனைவரும் 17:17 என்ற உரம் கிடைப்பதில்லை எனவும், சில விற்பனையாளர்கள் விவசாயிகளுக்கு போதிய உரங்களை கொடுப்பதில்லை என்றும் புகார் தெரிவித்துள்ளனர்.

÷தற்போது 17-க்கு 17- என்ற உரம் தயாரிப்பதே இல்லை. தயாரிக்காத உரத்தை கேட்டால் எப்படி விவசாயிகளுக்கு கிடைக்கும்.

பெரும்பாலான விவசாயிகள் இந்த உரத்தை கேட்பதால் வரும் பிப்ரவரி மாதம் முதல் மேற்கண்ட உரத்தை தயார் செய்து மானிய விலையில் விவசாயிகளுக்கு வழங்குவோம். மேலும் அனைத்து உரிமம் பெற்ற விற்பனையாளர்களுக்கும் அனுப்பி வைக்கப்படும் என்று அவர் விவசாயிகளிடம் தெரிவித்தார்.

÷நிகழ்ச்சியில் 300-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்துகொண்டனர்.

தினமலர்

**விவசாயிகளுக்கு நான்கு பயிற்சிகள்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 24,2011,00:54 IST

திருவள்ளூர் : வேளாண்மை பொறியியல் துறை சார்பில், 2010-11ம் ஆண்டில் திருவள்ளூர் மாவட்டத்தில் நவீன வேளாண் கருவிகளின் செயல்பாட்டினை அறியும் வகையில், செயல் விளக்கங்கள் அளிக்கப்பட உள்ளன.நெல் உற்பத்தி, கரும்பு உற்பத்திக்கான நவீன வேளாண் இயந்திரங்களின் அறிமுகப் பயிற்சியும், நுண்ணீர் பாசனம் மூலம் நீர் மேலாண்மை மற்றும் நீர் சேமிப்பு உபகரணங்கள் பயிற்சியும், பயிர் பாதுகாப்பு உபகரணங்கள் இயக்குதல் மற்றும் பராமரித்தல் பற்றிய பயிற்சியும் அளிக்கப்பட உள்ளது. பயிற்சியில் கலந்து கொள்ள 20 விவசாயிகள் முன்னுரிமை அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுவர். அவர்களுக்கு ஒரு வாரம் பயிற்சி அளிக்கப்படும். போக்குவரத்து செலவு மற்றும் பயிற்சிக்கான ஊதியமும் வழங்கப்படும்.இவை, திருவள்ளூர் வேளாண்மை பொறியியல் துறை கட்டுப்பாட்டில் உள்ள திருவள்ளூர், திருத்தணி, பொன்னேரி ஆகிய அலுவலகங்கள் மூலம் செயல்படுத்தப்பட உள்ளன.இதுகுறித்து தகவலறிய விவசாயிகள் அலுவலகங்களை அணுகி விண்ணப்பத்தினை பதிவு செய்து கொள்ளலாம். இவ்வாறு கலெக்டர் ராஜேஷ் தெரிவித்துள்ளார்.

**காளாண் வளர்த்தல் பயிற்சி வகுப்பு**

பதிவு செய்த நாள் : ஜனவரி 24,2011,01:16 IST

விருத்தாசலம் : விருத்தாசலத்தில் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் காளாண் வளர்த்தல் மற்றும் விதை உற்பத்தி குறித்த பயிற்சி வகுப்பு நடந்தது. விருத்தாசலம் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தின் கீழ் காளாண், மண்புழு உரம், மண் மற்றும் நீர் பரிசோதனை, விதை மற்றும் வீரிய விதை உற்பத்தி குறித்த தொழில்நுட்ப பயிற்சி வகுப்பு நடந்தது. இதில் விழுப்புரம் மாவட்டத்தை சேர்ந்த விவசாயிகள் பயிற்சி பெற்றனர். வேளாண் அறிவியல் நிலைய உதவி பேராசிரியர்கள் தனுஷ்கோடி, அருட்செந்தில், ராஜ் பயிற்சி அளித்தனர்.

**ரூ. 2 கோடியில் நவீன இயந்திரம் வரவழைப்பு ஒரு மணி நேரத்தில் 30 டன்கள் கரும்பு அறுவடை**

பதிவு செய்த நாள் : ஜனவரி 24,2011,01:46 IST

விக்கிரவாண்டி : முண்டியம்பாக்கம் ராஜ்ஸ்ரீ சர்க்கரை ஆலையில் கரும்பு அறுவடை செய்யும் இயந்திரம் அறிமுக விழா நடந்தது. விழாவிற்கு சர்க்கரை ஆலை பொதுமேலாளர் கார்த்திகேயன் தலைமை தாங்கினார். ஆலை நிர்வாகத்தினரால் புதியதாக அமெரிக்க நாட்டை சேர்ந்த ஜான்டீர் நிறுவனத்திலிருந்து 2 கோடி ரூபாய் செலவில் வாங்கியுள்ள கரும்பு அறுவடை இயந்திரத்தை விவசாயிகளிடம் கார்த்திகேயன் அறிமுகம் செய்தார். விழாவில் ஆலை துணை பொதுமேலாளர் (கரும்பு) கதிரவன் பேசியதாவது: அமெரிக்கா நாட்டிலிருக்கும் ஜான்டீர் நிறுவனத்திலிருந்து ரூபாய் 2 கோடி செலவில் புதிய கரும்பு அறுவடை இயந்திரம் வாங்கப்பட்டுள்ளது. கரும்பு வெட்டும் தொழிலா ளர்கள் தட்டுப்பாடு மற்றும் சில பிரச்னைகளை விவசாயிகள் சந்திக்கின்றனர். இயந்திரத்தின் மூலம் தினமும் 5 ஏக்கர் முதல் 7 ஏக்கர் வரை கரும்பு அறுவடை செய்து விரைவாக ஆலைக்கு கொண்டு வர நிர்வாகம் ஏற்பாடு செய்துள்ளது. ஒரு மணி நேரத்திற்கு 30 டன்கள் வரை கரும்பு அறுவடை செய்ய முடியும். இயந்திரத்தின் மூலம் கரும்பு அறுவடை செய்ய மிகவும் குறைவான செலவையே செய்வதால் விவசாயிகளுக்கு செலவு மிச்சமாகிறது. நேரம், அலைச்சல் போன்றவைகளை விவசா யிகள் இனி சந்திக்க தேவை யில்லை. இவ்வாறு கதிரவன் பேசினார்.ஆலை உதவி பொது மேலாளர்(கரும்பு) லட்சு மணன் உட்பட முன்னோடி விவசாயிகள் பலர் கலந்து கொண்டனர்.

**துறிஞ்சலாறு உபவடிநில விவசாயிகளுக்கு பயிற்சி**

பதிவு செய்த நாள் : ஜனவரி 24,2011,01:39 IST

திருக்கோவிலூர் : வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை நீர்வள நிலவளத் திட்டத்தின் கீழ் துறிஞ்சலாறு உபவடிநில விவசாயிகளுக்கு தொழில் நுட்ப பயிற்சி முகாம் மணலூர்பேட்டையில் நடந்தது. நீர் வள, நிலவள திட்டத்தின் கீழ் தமிழக அரசு பல்வேறு துறைகள் சார்பில் அளிக்கும் மானியங்கள், வேளாண் விளை பொருட்களை விற்பனை சந்தையில் லாபகரமாக விற்பனை செய்யும் தொழில் நுட்ப யுக்திகள், மக்காச்சோள சாகுபடி குறித்து பயிற்சியளித்தனர். வேளாண் வணிகத்துறை இயக்குனர் தனவேல் தலைமை தாங்கினார். வேளாண்மை அலுவலர் செந்தில் வரவேற்றார். தொழிலதிபர் காசிவிஸ்வநாதன், உதவி வேளாண் அலுவலர் சபரிதாசன், துணை வேளாண்மை அலுவலர் குமார் கருத்துரை வழங்கினர். நீர் பாசன சங்க தலைவர்கள், உறுப்பினர்கள், வேளாண் விளை பொருட்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். உதவி வேளாண்மை அலுவலர் முத்து நன்றி கூறினார்.

**கொள்முதல் மையங்களிலேயே மீன்கள் விற்பனை**

பதிவு செய்த நாள் : ஜனவரி 24,2011,02:14 IST

மேட்டூர்: அணை கரையோரம், மீன்கள் கொள்முதல் செய்யும் மையங்களிலேயே, மீன்கள் விற்பனையாகி விடுவதால், கூட்டுறவு சங்கத்திற்கு மீன்வாங்க செல்லும் மக்கள் ஏமாற்றத்துடன் திரும்பி செல்கின்றனர்.
மேட்டூர் அணையில், மீன்துறை உரிமம் பெற்ற, 2,000 மீனவர்கள், மீன் பிடிக்கின்றனர். மேட்டூர் மீனவர் கூட்டுறவு சங்கம் சார்பில், மீனவர்களிடம் மீன்கள் கொள்முதல் செய்து, பொதுமக்களுக்கும், மொத்த வியாபாரிகளுக்கும் விற்பனை செய்யப்படுகிறது. உள்ளூர், வெளியூர் பொதுமக்கள் கூட்டுறவு சங்கத்திற்கு சென்று மீன் வாங்கி செல்வர்.மீனவர்களிடம் இருந்து மீன்களை கொள்முதல் செய்ய, மேட்டூர் அணை கரையோரம் மாசிலாபாளையம், பண்ணவாடி, கோட்டையூர், செட்டிப்பட்டி ஆகிய இடங்களில் கொள்முதல் மையம் உள்ளது. கூட்டுறவு சங்க ஊழியர்கள், மையங்களுக்கு வேனில் சென்று, மீனவர்களிடம் எடைபோட்டு மீன்களை கொள்முதல் செய்து சங்கத்துக்கு கொண்டு வருவது வழக்கம்.விடுமுறை நாளில் கொள்முதல் மையங்களுக்கு நேரடியாக பொதுமக்கள் சென்று விடுகின்றனர்.

சங்கத்துக்கு எடுத்து செல்வதற்கு பதிலாக சங்க ஊழியர்கள் மையங்களிலேயே கட்லா, ரோகு, மிர்கால் போன்ற முதல்ரக மீன்களை பொதுமக்களுக்கு விற்று விடுகின்றனர். விற்பனையாகாத எட்டரை பிளஸ், கெழுத்தி, சோனாங்கெழுத்தி போன்ற மீன்களை மட்டுமே சங்கத்துக்கு கொண்டு

வருகின்றனர்.அதனால், கூட்டுறவு சங்கத்துக்கு மீன் வாங்க செல்லும் உள்ளூர் மற்றும் வெளியூர் பொதுமக்கள் முதல்ரக மீன்கள் கிடைக்காமல், ஏமாற்றத்தோடு திரும்பி செல்கின்றனர். குறிப்பாக, வெளியூரில் இருந்து சுற்றுலா வரும் பயணிகளுக்கு, மீன் கொள்முதல் மையங்கள் எங்குள்ளது என, தெரியாது. அதனால், வெளியூரில் இருந்து சுற்றுலா வரும் பயணிகளே சங்கத்துக்கு மீன்வாங்க சென்று ஏமாற்றத்துடன் திரும்புகின்றனர்.நேற்று, கூட்டுறவு சங்கம், 440 கிலோ மீன் கொள்முதல் செய்தது. இதில், 170 கிலோ முதல் ரக மீன்கள் பண்ணவாடி, மாசிலாபாளையம், கோட்டையூர் கொள்முதல் மையங்களிலேயே விற்பனையாகி விட்டது. மீதமுள்ள இரண்டாம், மூன்றாம் தர மீன்களே சங்கத்திற்கு விற்பனைக்கு வந்தது.எனவே, மேட்டூர் மீனவர் கூட்டுறவு சங்கத்துக்கு மீன் வாங்க வரும் சுற்றுலா பயணிகள், பொதுமக்கள் ஏமாற்றம் அடையாமல் இருக்க மீன்களை சங்கத்திற்கு எடுத்து வந்தே விற்பனை செய்ய வேண்டும் என்பதே மீன் பிரியர்களின் கோரிக்கை.

**போலி விதை வாங்க வேண்டாம் விவசாயிகளுக்கு அறிவுரை**

பதிவு செய்த நாள் : ஜனவரி 24,2011,01:53 IST

ஈரோடு: போலி விதைகளை வாங்கி ஏமாற வேண்டாம் என விவசாயிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. ஈரோடு விதை ஆய்வு துணை இயக்குநர் மணிமொழி விடுத்துள்ள அறிக்கை: ஈரோடு மாவட்டத்தில் கீழ்பவானி பாசனம் இரண்டாம் போக தண்ணீர் எள் மற்றும் நிலக்கடலை சாகுபடிக்காக திறந்து விடப்பட்டுள்ளது. எள் மற்றும் நிலக்கடலை விதை வாங்கும்போது, விதை விற்பனை உரிமம் பெற்ற தனியார் விதை விற்பனை நிலையங்களில் விற்பனை பட்டியலை கேட்டு வாங்க வேண்டும். அதில் பயிர் ரகம், குவியல் எண், நிலை, காலாவதி நாள் போன்ற விபரங்கள் உள்ளனவா என உறுதி செய்து வாங்க வேண்டும். போலி விதைகள் வாங்கி ஏமாற வேண்டாம்

**கீழ்பவானி முறைநீர் பாசன விவசாயிகள் கூட்டம்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 24,2011,01:41 IST

கோபிசெட்டிபாளையம்: கோபி கோட்ட கீழ்பவானி முறைநீர் பாசன விவசாயிகள் மற்றும் பொதுப்பணித்துறை பொறியாளர்கள் கூட்டம் கோபியில் நடந்தது. இணை செயலாளர் பழனிசாமி தலைமை வகித்தார். கோட்ட அளவிலான நீர்பாசன குழு கூட்டத்தை மாதந்தோறும் நடத்துதல், கீழ்பவானி பாசன திட்டத்தில் திருகு திருப்பான்கள் குறித்த திட்ட மதீப்பிடு தயாரித்து அரசு அனுப்ப பொறியாளர்கள் நடவடிக்கை எடுத்தல், பராமரிப்பு பணிகள் செய்ய எக்டேருக்கு

100 ரூபாய் வீதம் அரசு ஒதுக்கீடு செய்தல், வாழை பயிருக்கான கடன் தொகையை திருப்பி செலுத்தும் காலத்தை 15 மாதமாக மாற்றுதல் உள்பட பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. கூட்டமைப்பு துணைத் தலைவர் ராமசாமி, இணை செயலாளர் வெங்கடாசலபதி, பகிர்மான கமிட்டி தலைவர் செங்கோட்டையன், உதவி செயற்பொறியாளர் சேகர், பாசன சபை நிர்வாகிகள் ரங்கசாமி, ராஜேந்திரன், நடராசு, பிரகாசம், சிவக்குமார், பழனிசாமி, மாரப்பன், பழனிசாமி உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**நீலகிரி மாவட்டத்தில் கடும் பனி: தேயிலை விவசாயம் பாதிப்பு**

பதிவு செய்த நாள் : ஜனவரி 24,2011,00:07 IST

ஊட்டி:நீலகிரி மாவட்டத்தில் நிலவும் கடும் பனியால், பசுந்தேயிலை விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது. நீலகிரி மாவட்டத்தின் பொருளாதார முதுகெலும்பாக பசுந்தேயிலை விவசாயம் உள்ளது. கடந்த பல ஆண்டுகளுக்கு முன் தேயிலைக்கு விலை வீழ்ச்சி ஏற்பட்டதால், விவசாயிகள் பாதிக்கப்பட்டனர். தேயிலை வாரியம் சார்பில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை மூலம், தற்போது பசுந்தேயிலைக்கு போதிய விலை கிடைக்கிறது. ஆனால், அவ்வப்போது மாறும் காலநிலையால், விவசாயம் பாதிக்கப்பட்டு மகசூல் குறைவது வழக்கமாக உள்ளது. கடந்த சில மாதங்களாக நிலவும் பனிப்பொழிவால், ஊட்டி, குன்னூர், கோத்தகிரி, கூடலூர், பந்தலூர், குந்தா தாலுகா பகுதிகளில் உள்ள பல தேயிலை தோட்டங்கள் கருகியுள்ளன.நீலகிரியில் ஒரு லட்சத்து 63 ஆயிரத்து 368 ஏக்கர் பரப்பில் தேயிலை சாகுபடி மேற்கொள்ளப்படுகிறது. இந்தாண்டு பனியின் தாக்கம் அதிகமாக உள்ளதால், மகசூல் குறைந்துள்ளது."பனிக்காலத்தில் தேயிலை செடிகளை புற்கள் மற்றும் தாகைகளால் மூட வேண்டும்; பனியால் அதிகளவு பாதிக்கப்பட்ட தோட்டங்களில் பிப்ரவரி, மார்ச் மாதங்களில் 28 அங்குல அளவில் கவாத்து செய்து, முறையாக பராமரிக்க வேண்டும்; தழை மற்றும் மணிச்சத்தை 2:3 என்ற விகிதத்தில் தெளிக்க வேண்டும். செடிகள் நன்கு தழைத்து வளர்ந்த பின் டை அமோனியம் பாஸ்பேட் உரத்தை தெளிக்க வேண்டும்' என்பன போன்ற அறிவுரைகள், உபாசி வேளாண் அறிவியல் நிலையம் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**தொட்டியம் விவசாயி தோட்டத்தில் 340 காய்களுடன் அதிசய வாழைத்தார்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 24,2011,02:06 IST

தொட்டியம்: திருச்சி மாவட்டம், தொட்டியத்தில், விவசாயி ஒருவரின் தோட்டத்தில், 340 காய்களுடன், இருந்த அதிசய வாழைத்தார் வெட்டப்பட்டது. தொட்டியத்தை சேர்ந்தவர் வாழை விவசாயி சந்திரசேகரன். திருச்சி மாவட்ட வாழை உற்பத்தியாளர் சங்க செயலாளராகவும்

உள்ளார். சந்திரசேகரன், தன் தோட்டத்தில், திருச்சி தேசிய வாழை ஆராய்ச்சி மையத்தின் புதிய தொழில்நுட்பத்தை பயன்படுத்தி ஒரு ஏக்கரில் பூவன் ரக வாழை சாகுபடி செய்திருந்தார். கடந்த, 19ம் தேதி வாழை அறுவடை செய்தார். பொதுவாக வாழைத்தாரில் ஒவ்வொரு சீப்பிலும், 30 முதல், 40 காய்கள் இருக்கும். சந்திரசேகரனின் தோட்டத்தில் அறுவடை செய்த ஒரு வாழைத்தாரில், 12 சீப்புகள் இருந்தன. அதில், மூன்று சீப்புகளில் அதிகளவில் காய்கள் இருந்தன. முதல் சீப்பில், 51 காய்கள், இரண்டாவது சீப்பில், 49 காய்கள், மூன்றாவது சீப்பில், 50 காய்கள் உள்பட மொத்தம், 340 காய்கள் அந்த வாழைத்தாரில் இருந்தன.

விவசாயி சந்திரசேகரன் கூறுகையில்,""பொதுவாக வாழைத்தாரில், 200 முதல் 220 காய்களே இருக்கும். ஆனால், எங்களது தோட்டத்தில் வெட்டிய ஒரு வாழைத்தாரில் மூன்று சீப்புகளில், 340 காய்கள் இருந்தது, ஆச்சரியமாக உள்ளது,"என்றார். தொட்டியம் பகுதியைச் சேர்ந்த விவசாயிகள் அதிசய வாழைத்தாரை வந்து ஆர்வமுடன் பார்த்துச் செல்கின்றனர். தேசியவாழை ஆராய்ச்சி மையம் மற்றும் சிறுகமணி வேளாண் அறிவியல் மைய விஞ்ஞானிகள் வாழைத்தாரினை பார்வையிட்டு, அதன் ஒரு பகுதியை ஆய்வுக்கு எடுத்துச் சென்றனர்.

**பட்டீஸ்வரம் பகுதியில் உளுந்து விதை நடுதல் தீவிரம்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 24,2011,01:57 IST

கும்பகோணம்: கும்பகோணம் அருகே உள்ள பட்டீஸ்வரம் பகதியை சுற்றியுள்ள பல இடங்களில் உளுந்து விதை விடும் பணி தீவிரமாக நடக்கிறது. பட்டீஸ்வரம் பகுதியில் கடந்த சில நாட்களுக்கு முன்னர் அரசின் விவசாயத்துறையின் சார்பில் உளுந்து விதை மான்ய விலையில் கொடுக்கப்பட்டது.
கொற்கையில் உள்ள விதை விற்பனை நிலையத்தில் ஏராளமான விதைகள் விற்பனைக்காக வைக்கப்பட்டன. மேற்படி விதைகள் தற்போது நல்ல முறையில் விவசாயிகள் வாங்கி சென்று தமது வயல்களில் தூவினர். தற்போது உளுந்த விதை விதைக்க சரியான தருணம் என்பதால் நெல் அறுவடைக்கு முன்னதாகவும், பின்னரும் உளுந்து விதைகளை விட்டு சாகுபடி செய்து பலன் பெருமாறு வேளாண்மை துறை அதிகாரிகள் விவசாயிகளை கேட்டுக்கொண்டுள்ளனர்.

**ஜன., 28ல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 24,2011,01:58 IST

தஞ்சாவூர்: தஞ்சாவூர் கலெக்டர் அலுவலகம் பிரதான கட்டிட கூட்ட அறை முதல் மாடியில் ஜனவரி 28ம் தேதி காலை 10.30 மணிக்கு விவசாயிகள் குறைதீர் கூட்டம் கலெக்டர் சண்முகம்

தலைமையில் நடக்கிறது.விவசாயம், நீர்ப்பாசனம், கால்நடை, கூட்டுறவு, மின்சாரம், வேளாண்மை பொறியியல் துறை, நுகர்பொருள் வாணிபக்கழகம், தோட்டக்கலைத்துறை போன்ற விவசாயம் தொடர்புடைய கருத்துக்களை மட்டும் விவசாயிகள், விவசாய சங்க பிரதிநிதிகள் பங்கேற்று தெரிவிக்குமாறு கலெக்டர் சண்முகம் கேட்டுக்கொண்டார்.

**விவசாயிகள் மறியல் முயற்சி**

பதிவு செய்த நாள் : ஜனவரி 24,2011,01:02 IST

பரமக்குடி : பரமக்குடி தாலுகாவில் மழை நிவாரணம் வழங்காததை கண்டித்து விவசாயிகள் சங்கத்தின் சார்பில், ஏராளமான விவசாயிகள் மழையால் பயனற்றுப் போன நெற்கதிர்களுடன் பரமக்குடி ஐந்து முனையில் சாலை மறியலில் ஈடுபட முயன்றனர். விவசாயிகள் சங்க மாவட்ட செயலாளர் முத்துராமு, தாலுகா செயலாளர் ஜெயராஜ், மாநில குழு உறுப்பினர் ஞானவாசகம், காசிநாததுரை மற்றும் ஊராட்சி தலைவர்களின் தலைமையில் சென்றனர். அங்கு வந்த இன்ஸ்பெக்டர் சிவக்குமார் , பேச்சுவார்த்தை நடத்த ஸ்டேஷனுக்கு அழைத்துச் சென்றார். பரமக்குடி அதிகாரிகள் பரமக்குடியில் பாதிப்பே கிடையாது என எழுதியதின் காரணமாக சல்லிக்காசு கூட கிடைக்காமல் உள்ளதாக விவசாயிகள் கூறினர். ஐந்து நாட்களுக்கு ஆய்வு செய்து நிவாரணம் வழங்க பரிந்துரைக்கப்படும்,"என,தாசில்தார் கூறியதால் கலைந்து சென்றனர் .

**மஞ்சள் தேமல் நோயினைகட்டுப்படுத்த யோசனை**

பதிவு செய்த நாள் : ஜனவரி 24,2011,01:30 IST

தூத்துக்குடி: மஞ்சள் தேமல் நோயினை கட்டுப்படுத்த வேளாண் அதிகாரி யோசனை தெரிவித்துள்ளார்.கயத்தார் வட்டாரத்தில் திருமங்கலகுறிச்சி பன்னீர்குளம், கூட்டுப்பண்ணை, கடம்பூர் ஆகிய பகுதிகளில் பயிரிட்டுள்ள வெண்டை சாகுபடியாளர்களுக்கு கயத்தாறு தோட்டக்கலை உதவி இயக்குனர் யோசனை தெரிவித்துள்ளார்.

தற்போதுள்ள காலநிலையில் வெள்ளை ஈக்கள் அதிக அளவில் காணப்படுவதால் வெண்டை பயிரில் மஞ்சள் தேமல் நோய் என்னும் நச்சுயிரி நோய் வெள்ளை ஈக்கள் மூலம் பரவுவதால் விவசாயிகள் 1 லிட்டர் நீருக்கு 2 மில்லி மானோகுரோட்டபாஸ் மருந்துடன் 2 மில்லி வேம்பு எண்ணெய் கலந்து தெளிக்க வேண்டும் அல்லது 1 லிட்டர் நீருக்கு 1 கிராம் டைபென்தியூரான் மருந்தினை 1 மில்லி சோப்பு திரவம் கலந்து தெளிக்க வேண்டும். மருந்தடிக்கும் முன் ஏற்கனவே தாக்குதலுக்குள்ளான செடிகளை மட்டும் அப்புறப்படுத்தி எரித்து அளித்துவிட வேண்டும்.

இவ்வாறு செய்வதால் மஞ்சள் தேமல் நோயினை எளிதில் கட்டுப்படுத்தலாம். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

**விவசாயிகளுக்கு தோட்டக்கலை பயிற்சி**

பதிவு செய்த நாள் : ஜனவரி 24,2011,01:43 IST

தூத்துக்குடி:கயத்தார் வட்டார மக்கள் பிரதிநிதிகள் மற்றும் விவசாயிகளுக்கு தோட்டக்கலை பயிற்சி நடந்தது.தோட்டக்கலை துறை மூலம் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்களில் தொழில்நுட்பங்களை தெரிந்து கொண்டு சாகுபடி மேற்கொண்டால் அதிக லாபம் பெறமுடியும் என்ற நோக்கத்தின் அடிப்படையில் கயத்தாறு வட்டார மக்கள் பிரதிநிதிகள் மற்றும் விவசாயிகளுக்கு வட்டார அளவில் பயிற்சி அளிக்கப்பட்டது. கயத்தாறு வட்டார ஒன்றிய அலுவலக வளாகத்தில் நடந்த பயிற்சியில் கிராம பஞ்.,தலைவர்கள், உறுப்பினர்கள், விவசாயிகள் கலந்து கொண்டனர்.

விழாவிற்கு மாவட்ட தோட்டக்கலை துணை இயக்குநர் செய்யது அகமது மீரான்ஜி தலைமை வகித்து பேசியதாவது, ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் உயர்விளைச்சல் ரகங்களான வெண்டை எம்-10 ரக விதைகள் 50 சதவீதம் மானியத்தில் வழங்கப்படுவதன் நோக்கம், வழக்கத்தில் உள்ள நாட்டு ரகங்களை விட இந்த ரகங்களால் அதிக விளைச்சலும், நிகர கூடுதல் லாபமும் விவசாயிகள் பெறலாம். இந்த ரகங்களை நடும்போது நான்கு அடி மேட்டுபாத்தி அமைத்து அதன் அருகில் இருபக்கமும் சால் அமைத்து சால் ஓரத்தில் வரிசையாக ஒன்றரை அடி இடைவெளியில் செடி விதைகளை ஊன்றி விதைத்து சாகுபடி செய்தால் சராசரி மகசூலை விட 20 சதவீதம் மகசூல் அதிகரிக்கும். இதனால் மொத்த உற்பத்தியும் அதிகரிப்பதால் உணவு தட்டுப்பாட்டை ஈடுகட்ட முடியும் என்று கூறினார்.

விழாவில் கயத்தாறு தோட்டக்கலை உதவி இயக்குநர் நாகராஜன் பேசியதாவது, உயர்தொழில் நுட்ப உற்பத்தி அதிகரிப்பு நுட்பத்தின் கீழ் கயத்தாறு வட்டாரத்திற்கு 2009-10 ல் 110 ஹெக்டேரும், 2010-11 ல் 45 ஹெக்டேரும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் ஒட்டுரக செடிகள் கொய்யா, மா, சப்போட்டா, புளி, நெல்லி ஆகிய பழச்செடிகள் மற்றும் மல்லிகை, ரோஜா பூச்செடிகள் உயரிய தொழில் நுட்பத்துடன் இடுபொருட்களான நுண்ணூட்ட உரம், இயற்கை உரங்கள், தாவர பூச்சிக் கொல்லி மருந்துகள் பயன்படுத்தி வளமான பயிரினை உருவாக்கி அதிக மகசூல் பெற்று கூடுதல் லாபம் பெறும் வகையில் இத்திட்டம் செயல்படுத்துவதாக தெரிவித்தார்.கூட்டத்தில் கோவில்பட்டி மண்ஆய்வக வேளாண்மை அலுவலர் செல்வம் கூறியதாவது, மண் மற்றும் நீராய்வு மாதிரிகள் எவ்வாறு எடுப்பது என்றும், அதன்படி உரமிட்டு உரச்செலவினை 30 - 40 சதவீதம் குறைத்து சமச்சீர் உரமாக அளிப்பதால்

மண்வளம் காக்கப்படும் எனவும், பூச்சி நோய்கள் தாக்குதலை கட்டுப்படுத்தி அதிக மகசூலும், லாபமும் விவசாயிகள் பெறமுடியும் என்பதை வலியுறுத்திக் கூறினார். விழாவிற்கான ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர் தங்கம் செய்திருந்தார்.

**பயோடைவர்சிட்டி துறையில் ஒரு மகா கொள்ளை!**

ஆர்.எஸ். நாராயணன்

First Published : 24 Jan 2011 12:43:46 AM IST

Last Updated : 24 Jan 2011 12:49:19 AM IST

கடந்து சென்ற 2010 வருத்தப்பட வேண்டிய ஆண்டு. நல்லவை எதுவுமே நினைவுக்கு வரவில்லை. பொய், பித்தலாட்டம், சூது-வாது, பகல் கொள்ளை, இரவுக்கொள்ளை, ஆபாச விடியோ, பலாத்காரம், ஏமாளிகளை ஏய்த்துப் பறிக்கும் காவல் நிலையம், கட்டைப்பஞ்சாயத்து, தீ, வெடிகுண்டு, துப்பாக்கிச்சூடு, இலங்கையில் தமிழர் படுகொலை போன்றவை ஒருபக்கம். கிரிமினல்களும், கிரிமினல்களைக் கட்டியாளும் அரசியல்வாதிகளும், ஆளும் இந்திய ஜனநாயக ராஜ்ஜியத்தில் நாம் என்னதான் எதிர்பார்க்க முடியும்?

நம்மை ஆட்சிசெய்யும் அமைச்சர்களின் எதிர்பார்ப்புகள் நிறைவேறுகின்றன. ஊழல்களில் உயர்ந்துவிட்டனர். வன்முறையற்ற ஊழல், ரத்தம் சிந்தாத ஊழல் எல்லாமே ரத்தம் சிந்திய தியாகிகள் வாங்கித்தந்த சுதந்திர இந்தியாவுக்குக் கிட்டிய பரிசு. 2ஜி அலைக்கற்றை ஊழல், தொலைபேசிப் பேச்சுகள் மூலமே வெளிச்சத்துக்கு வந்தது. குற்றம்புரிந்தும் தண்டனை பெறாத கிரிமினல்களாக வாழும் அமைச்சர்களின் காலமிது. இது ஊழல் சீசன்.

ஊழல்களுக்கெல்லாம் ராஜாவாகத் திகழும் 2ஜி ஸ்பெக்ட்ரம் ஊழலில் ஒன்றைப்போட்டுப் பின் எழுபத்திஆறைப் போட்டு பதின்மூன்று பூஜ்ஜியங்களைப் போட்டு அத்தனை ரூபாய்களையும் எண்ணிப் பார்க்க வேண்டும் என்று பொதுக்கணக்குத் தணிக்கை மேலதிகாரிகள் சமர்ப்பித்த அறிக்கையை உச்ச நீதிமன்றம் ஏற்றுக்கொண்டுள்ளது.

இதைப்போலவே பெரிய ஊழல் பயோடைவர்சிட்டி ஊழல். கண்ட்ரோலர் மற்றும்ஆடிட்டர் ஜெனரல் ஆஃப் இந்தியா இந்த ஊழலை அம்பலப்படுத்தினாலும் நஷ்டத்தை மதிப்பிடுவதில் சிரமம் உள்ளது.

இன்று உலகில் லட்சங்கோடிகளாகப் பணம் புரளும் வியாபாரத்தில் ஒன்று தகவல் தொழில்நுட்பம். உலகளாவிய ஒலிபரப்பு - ஒளிபரப்பு, சின்ன கைப்பேசி, கம்ப்யூட்டர், டி.வி. எல்லாம் இதில் அடக்கம்.

ஒரு விவசாயிக்கு ரூ. 1,000 மானியம் வழங்க யோசிக்கிறது அரசு. ஆனால், 2ஜி விஷயத்தில் கைப்பேசி வியாபாரம் செய்யும் ரத்தன் டாட்டாவுக்கும் அம்பானிகளுக்கும் கோடி கோடியாக மானியம், நடுவில் கமிஷன், எல்லாம் வழங்கப்பட்டுள்ளதாக ஊடகங்கள் கூறுகின்றன.

இவ்வாறே லட்சங்கோடிகள் புரளும் வியாபாரம் பயோடெக்னாலஜி. இது முழுக்க முழுக்க அமெரிக்க - ஐரோப்பிய நிறுவனங்களின் ஏகபோகம். இத்தொழில் நுட்பத்துக்குரிய மூலப்பொருள் இந்தியாவிலிருந்து செல்கிறது. ""சட்டத்துக்குப் புறம்பாக இப்படி ஒரு கொள்கையா?'' 2009-ம் ஆண்டிலேயே ஆடிட்டர் ஜெனரல் தேசிய பயோடைவர்சிட்டி அத்தாரிட்டியைத் தட்டிக் கேட்டுள்ளார். நீரா ராடியா, ஆடியோ சி.டி. மாதிரி கவனத்தைக் கவர்வதுபோல எதுவும் இல்லாததால் இச்செய்தி பத்தோடு பதினொன்று என்று மறைக்கப்பட்டுவிட்டது.

பயோடைவர்சிட்டி என்றால் வீசை என்ன விலை என்று கேட்கும் ஒரு வேளாண் விஞ்ஞானி பி.எல். கவுதம் என்பவர். நேஷனல் பயோடைவர்சிட்டி அத்தாரிட்டியின் தலைவர்.

ஐ.நா. பயோடைவர்சிட்டி கன்வென்ஷன் 29-12-1993-ல் கையெழுத்தாகி நமது உயிரியல் செல்வங்கள் பாதுகாக்கப்பட உறுதி எடுத்தாலும்கூட 2003-ல்தான் தேசியப் பல்லுயிர்ப் பெருக்க ஆணையம் - அதாவது நேஷனல் பயோடைவர்சிட்டி அத்தாரிட்டி உருவானது.

இது உருவாகி ஆறு ஆண்டு கழிந்தாலும் நமது பல்லுயிர்ப் பெருக்கத்தை யாரும் சேதப்படுத்தாமல் அல்லது கொண்டுசெல்லாமல் தடுக்கும் விதிமுறைகளே உருவாக்கப்படவில்லை என்றும், பயோடைவர்சிட்டி ஆராய்ச்சி முடிவுகளோ, அறிவுசார்ந்த சொத்துரிமைப் பாதுகாப்புக் காப்புரிமை பற்றியோ எதுவும் அறிவிக்கப்படாதது ஏன் என்று ஆடிட்டர் ஜெனரல் கேட்டுள்ளார்.

குறைந்தபட்சம் கட்டுப்பாடு விதிமுறைகள்கூட வகுக்கப்படாமல் இயற்கைச் செல்வம் கொள்ளை போவதைக் கன்னத்தில் பளார் என்று அறைந்ததுபோல் கூறியுள்ள சி.ஏ.ஜி. தணிக்கை ஆணையம், இன்னமும் அழியும் நிலையில் உள்ள தாவரங்களின் குறிப்பாக அரிய மூலிகை விவரங்களின் பட்டியலைக்கூட முழுமையாக வெளியிடவில்லை என்று குறிப்பிட்டுள்ளது.

இந்தியாவில் உள்ள 28 மாநிலங்களில் 6 மாநிலங்களிலிருந்து மட்டுமே விவரம் சேகரிக்கப்பட்டுள்ளது. அதைவிட வெட்கக்கேடு, மக்கள் பல்லுயிர்ப் பெருக்கப் பதிவேடு என்று ஒப்புக்குக்கூட இல்லை.

பல்லுயிர்ப் பெருக்க வளம் அதாவது பயோலாஜிகல் ரிப்ஸ்ô ர்ஸ் புள்ளிவிவரங்களே இல்லை. இது என்ன அநியாயம்? சும்மா உட்கார்ந்து சம்பளமும், பன்னாட்டு மருந்து நிறுவனங்களிடமிருந்து கிம்பளமும், கமிஷனும் வாங்க ஓர் ஆணையமா? சி.ஏ.ஜி. அறிக்கையைப் படித்தால் இப்படித்தான் ஒருவர் எண்ணுவார்.

பயோடைவர்சிட்டி, பயோடெக்னாலஜி என்றால் பி.ட்டி கத்தரிக்காய் மட்டுமே என்று எண்ணும் விவசாய விஞ்ஞானியை பயோ ஆணையத்தின் தலைவராக நியமித்தால் அவர் என்ன செய்வார்? மான்செண்டோ நிறுவனத்தை வளர்க்கும் அதே விவசாய விஞ்ஞானிகளே இந்தியாவின் அரிய மூலிகைகளையும், விலைமதிப்பற்ற நுண்ணுயிரிகளையும் (இங்கு ஆராயாமல்)

""அள்ளிக்கொண்டு போ" என்று வழங்கி பன்னாட்டு பயோ, மருத்துவ நிறுவனங்களின் சுரண்டலுக்கு வழி அமைத்துக் கொடுத்துள்ளனர். இதற்காக தேசிய பயோடைவர்சிட்டி ஆணையத்தை சி.ஏ.ஜி. கண்டித்துள்ளார்.

நம்முடைய அறிவார்ந்த சொத்துரிமைகளை அந்நியர்களுக்கு வழங்குவது சட்டத்தை மீறிய செயல். இவ்வாறு சட்டமும் மீறப்பட்டுள்ளது. அப்படியே அந்நிய நாட்டில் காப்புரிமை செய்ய இங்கிருந்து கொண்டு செல்லப்படும் இயற்கை விளைபொருள்களைப் பரம்பரை பரம்பரையாகப் போற்றி வளர்த்த பழங்குடியினர்களுக்குச் சேரவேண்டிய பங்கை வழங்க அனைத்துலகக் காப்புரிமைச் சட்டம் வழிவகுத்திருந்தாலும்கூட இன்றுவரை எந்த விவசாயியோ, பழங்குடியோ பங்குபெற்றதாக எதுவும் கணக்கு இல்லையாம்!

இவர்கள் கணக்கு வழங்காவிட்டாலும் கொள்ளையடிக்கப்பட்ட இயற்கைச் செல்வங்களைஇந்திய மூலிகை ஏற்றுமதிக் கணக்கிலிருந்து அறிய முடியும்.

சொல்லப்போனால், பயோடைவர்சிட்டி போன்ற ஒரு சிக்கலான விஞ்ஞானத்தைக் கணிதம் பயின்ற தணிக்கைக்குழு கோடிட்டுக் காட்டியுள்ளது குறைவுதான் என்றும், பல்லுயிர்ப் பெருக்க பயோ விஞ்ஞானிகள் கருதுகின்றனர். சி.ஏ.ஜி.யைப் பொருத்தவரை அவர்கள் அறிந்தவற்றை மட்டுமே வெளியிட்டுள்ளதாக இத்துறை சார்ந்த நிபுணர்கள் கூறுகின்றனர்.

கல்பவிருஷம் என்ற தொண்டு நிறுவனத்தைச் சேர்ந்த காஞ்சி கோஹ்லியும் மஷ்குரா பரீதியும் அவர்களுடன் கிரைன் அமைப்பைச் சேர்ந்த ஷாலினிபூட்டானியும் ஒருங்கிணைந்து, இந்தியாவின் பல்லுயிர்ப் பெருக்க - உயிர்வளங்களைக் கையாள்வதில் உள்ள முறைகேடுகளைப் பற்றி ""ஆறு ஆண்டு பல்லுயிர்ப் பெருக்கச் சட்டம்" என்ற தலைப்பில் எழுதியுள்ள புத்தகத்தில் பல்லுயிர்க் கொள்ளை புட்டுப்புட்டு வைக்கப்பட்டுள்ளது.

தேசியப் பல்லுயிர்ப் பெருக்க ஆணையத்திடமிருந்து தகவல்களைப் பெறவே ஓராண்டுக்காலம் போராடிப் பின்னர் மையத் தகவல் கமிஷனுக்கு முறையிட்டுத் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தைப் பயன்படுத்தி விவரங்கள் சேகரிக்கப்பட்டதாக அவர்கள் கூறுகின்றனர். இந்தப் புத்தகத்தில் உள்ளவற்றில் மிகவும் முக்கியமாகக் கவனிக்க வேண்டிய முறைகேடுகளாவன:

""செப்டம்பர் 2008வரை பல்லுயிர்ப் பெருக்க பயோ வளத்தை எடுத்துச் செல்ல 315 அனுமதிகள் வழங்கப்பட்டுள்ளன.

இவற்றில் எதையும் ஆற அமரச் சிந்திக்காமல் ஒரேநாள் கூட்டத்தில் 161 அனுமதிகள் வழங்கப்பட்டுள்ளன. அறிவார்ந்த சொத்துரிமை அனுமதி 246 நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அறிவார்ந்த சொத்துரிமை அனுமதி என்றால் தோற்ற மையத்தில் உள்ள பழங்குடி/ விவசாயிகளின் விவரம், பங்கு பற்றிய குறிப்பு பதிவாக வேண்டும். அப்படி எதுவுமே பதிவாகவில்லை..."

அறிவார்ந்த சொத்துரிமையில் பங்கு என்பதற்கு ஓர் உதாரணம் வருமாறு: தமிழ்நாட்டிலிருந்து சர்ப்பகந்தா, நித்தியகல்யாணி என்ற மூலிகைகள் ஜெர்மனிக்கு ஏற்றுமதியாகிறது.

ஜெர்மனியில் மேற்படி மூலிகைகளிலிருந்து இதய நோய் மருந்து தயாராகிறது. அந்த மருந்தைப் பிரித்தெடுக்கும் செய்முறைக்குக் காப்புரிமை அறிவார்ந்த சொத்துரிமை அடிப்படையில் வழங்கப்படுகிறது. அப்படி வழங்கப்படும்போது மூலப்பொருளை வளர்த்தவர்களுக்கும் பங்கு தரவேண்டும் என்பது பயோ கன்வென்ஷன் சட்டமாகும்.

அறிவார்ந்த சொத்துரிமை அனுமதியை 246 நிறுவனங்களுக்கு நமது பயோடைவர்சிட்டி அத்தாரிட்டி வழங்கியதில் உள்ள முறைகேடுகளை சி.ஏ.ஜி.யும் கற்பகவிருக்ஷமும் சுட்டிக்காட்டியுள்ளன. இங்குள்ள அரிய மூலிகைகளைக் கொள்ளையடித்து பயோநுட்ப உதவியால் மில்லியன் -ட்ரில்லியன் டாலர் என்று பணம் சம்பாதிக்கும் பன்னாட்டு மருந்து நிறுவனங்கள் சில லட்சம் டாலர்களைத் தோற்றமைய விவசாயிகளுக்கு வழங்க சட்டத்தில் இடம் உண்டு.

ஒரு நாட்டின் பல்லுயிர்ப் பெருக்கங்களைப் பாதுகாக்க வேண்டிய அவசியத்தை 1992-ல் ரியோவில் கூடிய பூமி மகாநாட்டில்தான் முதலில் பேசப்பட்டது. வளரும் நாடுகளில் உள்ள பல்லுயிர்ப் பெருக்கங்களின் பண மதிப்புப் பற்றிய விவரங்களைப் பல நூல்கள் குறிப்பிட்டுள்ளன. இன்னமும் நமது உயிர்ச் செல்வங்கள் கொள்ளை போவதைத் தடுக்க முடியவில்லையே! இப்படிக் கொள்ளைபோவதில் யாருக்கு என்ன பங்கு? என்ற தேடுதலில் - இக் கொள்ளையின் மதிப்பீடு 2ஜி ஸ்பெக்ட்ரம் அளவுக்கு மதிப்பிடலாம் என்பது இத்துறை சார்ந்த வல்லுநர் கருத்து. தோற்ற மையம் பெற வேண்டிய இந்தியப் பங்கு மறுக்கப்பட்டுள்ளது. இந்த அநியாயங்களுக்கு ஆண்டவன் கூலி கொடுப்பான்.

**அஸ்தமிக்கும் நேரத்திற்குள் அரிசி வருமா?**

இரா. சுந்தரபாண்டியன்

First Published : 24 Jan 2011 12:44:53 AM IST

தனியொரு மனிதனுக்கு உணவில்லையென்றால் ஜகத்தினை அழித்திடுவோம் என்றார் மகாகவி. அவரையும் மறந்துவிட்டோம், அவர் கூறிய கருத்துகளும் காற்றோடு கலந்துவிட்டன. அவரும் இன்று நம்மிடையே இல்லை.

அவ்வையாருக்கு நேரிட்ட பசி மயக்கத்தால்தான், சுட்ட பழம் வேண்டுமா? சுடாத பழம் வேண்டுமா? என்று தமிழ்கடவுள் அவரிடம் கேட்க நேரிட்டது. நினைத்தவுடன் கவிபாடும் காளமேகப்புலவர், தெருவில் விளையாடிக்கொண்டிருந்த சிறுவர்களிடம் பாடம் கற்றுக்கொண்டதும் பசிமயக்கத்தால்தான்.

நல்லதங்காள் தனது பிள்ளைச்செல்வங்களை மாய்த்து, தானும் மாய்ந்து போனதும் இந்த பசிக்கொடுமையால்தான். நெசவாளர்களுக்குக் கஞ்சித்தொட்டி திறப்பதும், விவசாயிகள் தற்கொலை செய்துகொள்வதும் அவ்வாறே.

இவ்வாறாக எத்தனை எத்தனையோ உதாரணங்களை நம்மால் கூற இயலும். ஆயினும், நாம் கற்றுக்கொண்ட பாடம்தான் என்ன? ஒன்றுமில்லை என்ற கசப்பான உண்மைதான் பதிலாக இருக்கிறது.

கிடங்குகளில் பாழாய்ப்போகும் உணவுதானியங்களைப் பொதுமக்களுக்கு இலவசமாகவோ, மானிய விலையிலோ வழங்க வேண்டும் என்று ஆட்சியாளர்களை உச்ச நீதிமன்றம் இடித்துரைத்து மாதங்கள் பல கடந்த பின்பும் எந்த ஒரு நடவடிக்கையும் இருப்பதாகத் தெரியவில்லை. இது எதைக் காட்டுகிறது? மக்களை ஆட்சியாளர்கள் அலட்சியப்படுத்துவதற்கான மிகச்சிறந்த உதாரணம் இதுவாகத்தானே இருக்க முடியும்?

கஷ்ட ஜீவன காலத்திலும் தனது துணைவியார் அரிசியைப் புடைத்துக்கொண்டிருந்தபோது அதிலிருந்து ஒரு பிடியளவு எடுத்துப் பறவைகளுக்கு வீசி எறிந்துவிட்டுக் காக்கையும் குருவியும் எங்கள் ஜாதி என்றார் பாரதியார்.

கிடங்குகளில் சேமித்து வைக்கப்பட்டிருக்கும் தானியங்களை எலிகளுக்கும் பூச்சிகளுக்கும் உண்ணக்கொடுத்துவிட்டு அவைகளும் எங்கள் ஜாதிதான் என்று சொல்லாமல் சொல்கின்றனரோ, இன்றைய ஆட்சியாளர்கள்?

விலையேற்றத்தைக் கட்டுப்படுத்தவும் முடியவில்லை. விளைபொருள்களைப் பத்திரமாகச்சேமித்துவைக்கக் கட்டுமான வசதிகளும் இல்லை. ஊழலுக்கும் பஞ்சம் இல்லை. அரசியல் பிழைத்தோருக்கு அறம் கூற்றாவதும் இல்லை. அப்படியென்றால் இந்தியக் குடிமகனை ஊழ்வினை உறுத்து வந்தூட்டுகிறதா?

ஆயிரக்கணக்கான ரூபாய் என்ற அளவில் ஆரம்பித்த ஊழல் லட்சம், கோடி என்று பரிணமித்து, இன்று லட்சம் கோடி ரூபாயில் வந்து நிற்கிறது.

காலவெள்ளத்தில் எத்தனையோ ஊழல்களும், விசாரணை கமிஷன்களும் அடித்துச் செல்லப்பட்டுவிட்டன. எஞ்சியிருப்பதென்ன? எலும்பாலும், தோலாலும் போர்த்தப்பட்ட இந்தியனின் உடம்பும், அவனது உடைந்த உள்ளமும்தானே!

அடிமைப்படுத்தி நம்மை ஆளவந்த ஆங்கிலக் கூட்டத்தில் தோன்றி, இங்கிலாந்தில் உள்ள தனது சொத்துகளை விற்று, பெரும் உயிர், பொருள் சேதங்களுக்கும் ஆளாகி பெரியாறு அணையைக் கட்டி முடித்த பென்னி குக், லோகன்துரை ஆகியோரின் தியாகங்களையும், அர்ப்பணிப்பு உணர்வையும் இன்றைய ஆட்சியாளர்கள் சற்றேனும் எண்ணிப்பார்க்க வேண்டும்.

அலைக்கற்றை ஊழல் தொடர்பாக, பொதுக்கணக்குக் குழு முன்பு ஆஜராவதா அல்லது நாடாளுமன்றக் கூட்டுக்குழுவுக்கு உத்தரவிடுவதா என்று ஆளும் கட்சியினரும் எதிர்க்கட்சியினரும் ஒரு முடிவுக்கு வராமலேயே கடந்த குளிர்காலக் கூட்டத்தொடரின் நேரம் முழுவதும் விரயம் செய்யப்பட்டு, சுமார் ரூ. 146 கோடியும் வீணடிக்கப்பட்டிருக்கிறது.

இவ்வாறு வீணடிக்கப்பட்ட தொகையையும், இலவசங்களுக்காக ஆட்சியாளர்களால் ஒதுக்கப்படும் நிதியில் ஒரு பகுதியையும் புதியதாகத் தானியக்கிடங்கு

அமைப்பதற்காகச்செலவிடப்பட்டிருந்தால் வரும் காலங்களில் கணிசமான அளவு உணவு தானியங்களை பாதுகாத்திருக்க இயலும். இந்த விவரத்தை எந்தக் குழுவுக்கு முன் முறையிடுவது? சமீபத்தில் அமெரிக்க அதிபர் இந்தியாவுக்கு வருகை தந்தபோது பாதுகாப்பு உள்ளிட்ட காரணங்களுக்காகச் செலவிடப்பட்ட தொகை சுமார் 900 கோடி ரூபாய் என்பதும் குறிப்பிடத்தக்கது.

பசி என்ற நெருப்பானது ஏழைகளின் வயிற்றினுள் பற்றி எரிகிறபோது, ஆகாரத்தால் அதை அணைப்பதுதான் ஜீவகாருண்யம். இளைத்தவன் பசித்திருக்கும்போது அவனது வயிற்றில் இலவசம் என்ற ஈரத்துண்டை போர்த்துவது பசிப்பிணிக்கு சரியானதொரு தீர்வல்ல என்பது ஆட்சியாளர்கள் அறியாத ஒன்றல்ல.

இன்னும் சில மாதங்களில் தமிழகம், பாண்டிச்சேரி, கேரளம், மேற்குவங்கம், அசாம் ஆகிய மாநிலங்களில் சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெற இருக்கிறது. கூட்டணிகள் மாறலாம். காட்சிகள் மாறலாம்.

காலமும், கோலமும் மாறலாம். அவ்வாறு மாறினால்தான் தெரியும் அஸ்தமனம் யாருக்கென்று? ஆட்சியாளர்களுக்கா? அல்லது அன்றாடங் காய்ச்சிகளுக்கா என்று? அதற்குள் கிடங்குகளில் வீணாய்போகும் அரிசி உள்ளிட்ட உணவுதானியங்கள் வந்து சேருமா?

### மாசிப்பட்ட பருத்திசாகுபடியாளர்களுக்குவேளாண் அதிகாரி யோசனை

பதிவு செய்த நாள் : ஜனவரி 24,2011,01:30 IST

செய்துங்கநல்லூர்: மாசிப்பட்ட பருத்தி சாகுபடியாளர்களுக்கு வேளாண் விஞ்ஞானி யோசனை தெரிவித்துள்ளார்.கோடைப்பருவத்தில் பருத்தி சாகுபடி செய்ய இருக்கும் விவசாயிகள் அதிக மகசூல் பெற கீழ்
காணும் தொழில்நுட்பங்களை கடைபிடிக்கலாம். சம வயதுள்ள ரகத்தை யாவரும் தேர்ந்தெடுத்து ஏக காலத்தில் ஒரு வாரத்திற்குள் விதைத்திட வேண்டும். இயன்றவரை பூச்சிநோய் தாங்கி வளரவல்ல எஸ்விபிஆர் 2 ரகத்தை தேர்ந்தெடுத்து பயிரிட வேண்டும். சாணிப்பால் கொண்டு விதை நேர்த்தி செய்து நிழலில் உலர்த்த வேண்டும். பின்னர் விதைப்பதற்கு சற்று முன்பாக ஒரு கிலோ விதைக்கு பத்து கிராம் சூடோமோனாஸ் புளுரோசன்ஸ் பயன்படுத்தி விதை நேர்த்தி செய்யவும். காற்றடிக்கும் திசைக்கு குறுக்காக பார்கள் வரிசைகள் அமைத்து விதைத்தால் மருந்தடிக்கும் போது மருந்து கலவை வீணாகாமல் தடுக்க உதவும். வயலைச் சுற்றிலும் உள்ள செடிகள், களைகளை (பூச்சிகளுக்கு மாற்றுணவாக பயன்படும்) அகற்றி சுத்தமாக வைக்க வேண்டும்.

தொழு உரம் மற்றும் வேப்பம் பிண்ணாக்கு இடுவது பூச்சி மற்றும் நோய் (வேரழுகல், வாடல், நூற்புழு, தண்டுக்கூன் வண்டு, தரைக்கூன் வண்டு, வேர்ப்புழு) தாக்குதலை குறைக்கும். நட்ட 20 மற்றும் 30ம் நாள் வேப்பெண்ணெய் 1 சதம் கரைசல் தூரில் ஊற்றுதல் தண்டுக்கூன் வண்டு தாக்குதலைக் குறைக்கும். ஊடுபயிராக வாய்க்கால்கள் மற்றும் பாத்தி வரப்புகளின் ஓரங்களில் தட்டைப்பயிறு வளர்த்தால் பொறி வண்டுகள் பெருக்கத்திற்கு துணைபுரியும். மேலும் பூச்சியின் வருகையை கண்காணிக்க ஊடுபயிராக மக்காச்சோளம், உளுந்து மற்றும் சீனி அவரை (கொத்தவரை) ஓரப்பயிராக, சோளம், ஆமணக்கு, சூரியகாந்தி பயிரிட வேண்டும். இரட்டை வரிசையில் பருத்தியை பயிரிட்டு இடைவெளியில் ஒரு வரிசை உளுந்து அல்லது சீனி அவரை ஊடுபயிராக பயிரிடலாம். வயலைச் சுற்றி அரண் போன்று சோளம் நெருக்கமாக (உயரமாக வளரும் ரகம்) வளர்க்க வேண்டும் (தத்துப்பூச்சி, இலைப்பேன்கள், வெள்ளை ஈ, மாவுப்பூச்சி மற்றும் காய்ப்புழுவின் அந்துகள் வயிலினுள் நுழைவதை தடுக்க). உளுந்து ஊடுபயிராக பயிரிட்டால் தத்துப்பூச்சி தாக்குதல் குறையும். சீனி அவரை ஊடுபயிராக பயிரிட்டால் தத்துப்பூச்சி மற்றும் காய்ப்புழு தாக்குதல் குறையும். மேலும் இந்த பயறு வகை ஊடுபயிர்கள் மூலம் வேர் முடிச்சுகளில் தழைச்சத்து உற்பத்தி செய்யப்பட்டு மண்ணின் வளம் மேம்படுகிறது.வயலைச் சுற்றி ஆமணக்கு பயிரிட்டு புரடீனியாப் புழு முட்டைகளை சேகரித்து அழிக்கலாம் ஆமணக்கு புரடீனியா புழு தாய்ப்பூச்சிகளை முட்டையிட கவர்ந்திழுக்கும். வெண்டை, ஆமணக்கு மற்றும் சூரியகாந்தி பயிர்கள் முறையே புள்ளிக் காய்ப்புழு, புரடீனியா மற்றும் அமெரிக்கன் காய்ப்புழு தாக்குதலைக் கவர்ந்திழுக்கும். அப்பூச்சிகளை அங்கேயே கட்டுப்படுத்தி விட வேண்டும். ஊடுபயிராக வாய்க்கால்களில் மக்காச்சோளம் பயிரிட கிரைசோபா, குளவிகள் போன்ற நன்மை தரும் பூச்சிகளின் பெருக்கத்திற்கு துணை செய்யும். வாய்க்கால் வரப்புகளில் ஆங்காங்கே வெண்டை பயிரிட்டு சொத்தை காய்களை பறித்து அகற்ற வேண்டும். இவ்வாறு ஸ்ரீவில்லிபுத்தூர் பருத்தி ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் மற்றும் தலைவர் முருகேசன் தெரிவித்துள்ளார்.

**வேளாண், தோட்டக்கலை பட்டதாரிகள் 28ம் தேதி சென்னையில் உண்ணாவிரதம்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 24,2011,01:23 IST

சிதம்பரம் : வேளாண் மற்றும் தோட்டக்கலை பட்டதாரிகளை காலியாக உள்ள பணியிடங்களில் நியமிக்கக் கோரி வரும் 28ம் தேதி சென்னையில் உண்ணாவிரதம் போராட்டம் அறிவித்துள்ளனர். இதுகுறித்து அனைத்து வேளாண்மை பட்டதாரிகள் சங்க மாநிலத் தலைவர் பசுமைவளவன் வெளியிட்டுள்ள அறிக்கை:

வேளாண் பட்டதாரிகள் வாழ்வுரிமையான தமிழ்நாடு வேளாண் மன்றத்தை திருத்தங்கள் செய்து

விரைந்து நடைமுறைப்படுத்த வேண்டும். வேளாண்மை மற்றும் தோட்டக்கலை பட்டதாரிகளை பதிவு மூப்பு அடிப்படையில் ஆசிரியர் பணி நியமனம் செய்ய வேண்டும். பதிவு மூப்பு அடிப்படையில் வேளாண்மை மற்றும் தோட்டக்கலை துறையில் காலியாக உள்ள அலுவலர், உதவி வேளாண்மை பணி மற்றும் வேளாண் கூட்டுறவு வங்கி களப்பணியாளர், சிறப்பு அதிகாரி பணிகளில் வேளாண் மற்றும் தோட்டக்கலை பட்டதாரிகளை நியமிக்க வேண்டும். ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் 2009ம் ஆண்டு வேளாண் பட்டதாரி ஆசிரியர் பணிக்கு சான்றிதழ் சரிபார்க்கப்பட்ட 200 பேருக்கு உடனடியாக பணி நியமனம் வழங்க வேண்டும் என்பது உட்பட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி சங்கம் சார்பில் சென்னையில் வரும் 28ம் தேதி காயிதே மில்லத் மணி மண்டபம் முன்பு உண்ணாவிரதப் போராட்டம் நடத்தப்படும். இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

**மாவுப்பூச்சியை கட்டுப்படுத்த ஒட்டுண்ணி பூச்சி**

பதிவு செய்த நாள் : ஜனவரி 23,2011,02:45 IST

நாமக்கல்: கொல்லிமலை ஆலந்தூர் நாடு கிராமத்தில் பத்து ஏக்கர் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்ட மரவள்ளி பயிரில் மாவுப்பூச்சியை கட்டுப்படுத்த 1,000 ஒட்டுண்ணி பூச்சிகளை வேளாண் துறையினர் விட்டுள்ளனர்.நாமக்கல் மாவட்டம் கொல்லிமலை ஆலந்தூர் நாடு என்ற கிராமத்தில் மரவள்ளி சாகுபடி செய்யப்பட்ட நிலத்தில் மாவுப்பூச்சி தாக்குதலைக் கட்டுப்படுத்த ஒட்டுண்ணி பூச்சி வழங்கும் நிகழ்ச்சி நடந்தது. சேந்தமங்கலம் எம்.எல்.ஏ., பொன்னுசாமி தலைமை வகித்து, பத்து ஏக்கர் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்ட மரவள்ளி பயிரில் மாவுப் பூச்சி தாக்குதலைக் கட்டுப்படுத்த 1,000 ஒட்டுண்ணி பூச்சிகளை விட்டார்.அந்த முகாமில் மரவள்ளி மற்றும் ஆமணக்கு ஆராய்ச்சி நிலையத்தினர் மரவள்ளியில் பூச்சி கட்டுப்படுத்தும் முறை, ஒட்டுண்ணி உற்பத்தி செய்து பயிரில் விடப்பட்டது குறித்து விளக்கிக் கூறினர்.

மேலும், ஒட்டுண்ணி பூச்சி விடப்பட்ட மரவள்ளி தோட்டத்தில் பூச்சி மருந்து பயன்படுத்தக் கூடாது எனத் தெரிவிக்கப்பட்டது. மரவள்ளி மற்றும் ஆமணக்கு ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் பழனிச்சாமி, பூச்சியியல் துறை பேராசிரியர் வெங்கடேசன், வேளாண் அறிவியல் நிலைய இணைப்பேராசிரியர் மோகன் உட்பட பலர் பங்கேற்றனர்.
சேலம் மாவட்ட ஏத்தாப்பூர் மரவள்ளி மற்றும் ஆமணக்கு ஆராய்ச்சி நிலையம், நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி, ஆராய்ச்சி நிலையம், நாமக்கல் தாலுகா ஜவ்வரிசி மற்றும் ஸ்டார்ச் உற்பத்தியாளர்கள் சங்கம், தோட்டக்கலைத்துறையினர் இணைந்து இம்முகாமுக்கான ஏற்பாடுகளை செய்தனர்.

**விதை கிராமத்திட்ட பயிற்சி முகாம்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 23,2011,02:42 IST

மோகனூர்: மோகனூர் வட்டாரத்தில் ஆரியூர் கிராமத்தில் விதை கிராமத்திட்ட பயிற்சி முகாம் நடந்தது.ஆரியூர் பஞ்சாயத்து தலைவர் சுமதி தலைமை வகித்தார். வேளாண் அலுவலர் சுதா வரவேற்றார். வேளாண் உதவி இயக்குனர் தங்கராஜ் பங்கேற்று, பயிற்சியின் நோக்கம், விதை உற்பத்தியாளர்களுக்கான தொழில் நுட்பம் குறித்து விளக்கி பேசினார். விதைச்சான்று உதவி இயக்குனர் சுப்ரமணியம், விதை உற்பத்தி செய்வதன் பயன்கள் குறித்து பேசினார்.மண் பரிசோதனையின் முக்கியத்துவம், விதை உற்பத்தியில் பயிர் பாதுகாப்பு பற்றியும் விவசாயிகளுக்கு எடுத்துரைக்கப்பட்டது.

நடமாடும் வாகனம் மூலம் விவசாயிகளுக்கு கிராம அளவில் இடுபொருட்கள் வழங்கப்பட்டது. முடிவில் பயிற்சியில் பங்கேற்ற விவசாயிகளுக்கு ஊக்கத்தொகை, விதைகள், மினி கிட்டுகள், செயல்விளக்க இடுபொருட்கள் (கோனோபீடர், மார்கர்), ஜிப்சம், உயிர் உரங்கள், விவசாயிகளுக்கு மான்ய விலையில் வழங்கப்பட்டது.நிகழச்சியில் வேளாண் அலுவலர் தண்டபாணி, உழவர் பயிற்சி நிலைய வே ளாண் அலுவலர் அன்புச்செல்வி, உதவி வேளாண் அலுவலர்கள் மோகன்ராஜ், சந்திரசேகரன் மற்றும் 100க்கும் மேற்பட்ட விவசாயிகள் பங்கேற்றனர்.

**ஆனைமலையில் 2,600 ஏக்கரில் நெல் உற்பத்தி**

பதிவு செய்த நாள் : ஜனவரி 23,2011,23:25 IST

ஆனைமலை:ஆனைமலையை சுற்றியுள்ள பகுதிகளில் நெல் அதிக அளவில் பயிரிடப்பட்டுள்ளதால் பார்க்கும் இடமெங்கும் பச்சை கம்பளம் போர்த்தியதைப்போல் உள்ளது.ஆனைமலை ஒன்றிய வேளாண்மை உதவி இயக்குநர் உமாராணி கூறியதாவது: ஆனைமலையை சுற்றியுள்ள பகுதிகளில் 2,600 ஏக்கர் பரப்பளவில் நெல் உற்பத்தி செய்யப்படுகிறது. தற்போது நெல் நடவு முடிந்து நெல் தூர் விடும் பருவத்தில் உள்ளது. சமீபத்தில் நெல்லில் இழை சுருட்டுப்புழு தாக்கயது. இதை கட்டுப்படுத்த பயிர்பாதுகாப்பு முறையை விவசாயிகளுக்கு விளக்கி கூறி கட்டுப்படுத்தியுள்ளோம். ஏ.டி.டி. 43, ஏ.டி.டி. 45 போன்ற நெல் ரகங்கள் அதிக அளவில் பயிரிடப்பட்டுள்ளன. இந்த ரக நெல்கள் 105 நாட்கள் முதல் 115 நாட்களுக்குள் விளைச்சல் தரக்கூடியது. நெல் அறுபடை செய்வதற்குள் இரண்டு முறையாவது உரம் வைக்கவேண்டும். குறைந்த நாட்களில் விளைச்சல் தரும் நெல் ரகங்களையே விவசாயிகள்

விரும்பி பயரிடுகின்றனர் என்றார்.ஆனைமலை பகுதி விவசாயிகள் கூறும் போது, "ஆனைமலை சுற்றுவட்டார பகுதிகளில் முன்பெல்லாம் அதிக அளவில் நெல் விவசாயம் இருந்தது. தற்போது நெல் உற்பத்தி செய்வது குறைந்துவிட்டது. விவசாய கூலியாட்கள் பற்றாக்குறை உள்ளதால் உற்பத்தி செய்வது குறைந்துவிட்டது. குறைந்த நாட்களில் விளைச்சல் தரும் ரகங்களையே பயிரிடுகிறோம். பொன்னி போன்ற அதிக நாட்கள் எடுத்து விளைச்சல் தரும் ரகங்கள் பயிரிடுவது குறைந்து விட்டது. காலநிலை மாற்றம் போன்ற காரணங்களினால் அதிக நாட்கள் எடுத்து விளைச்சல் தரும் ரகங்கள் பயிரிடுவதை விரும்புவதில்லை என்றனர்.

**மண்புழு உரம் பயிற்சி நிறைவு**

பதிவு செய்த நாள் : ஜனவரி 23,2011,23:20 IST

பொங்கலூர்: பொங்கலூர், வேலம் பட்டி ஸ்ரீதேவி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் மண்புழு உரம் உற்பத்தி பயிற்சி நிறைவு விழா நடந்தது. தலைமை ஆசிரி யர் ஜேசுராஜா தலைமை வகித்தார். ஆசிரியர் பன்னீர் செல்வம் வரவேற்றார். பள்ளி தாளாளர் சாமிநாதன், மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கினார். பள்ளி முதல்வர் பேசுகையில், "இன்றைய வேளாண்மையில், இயற்கை உரத்தை பயன் படுத்துவது அவசியமானது. மாணவர்கள் இயற்கை உரமான மண்புழு உரங்களை பற்றி தெரிந்து கொள்வதுடன், அதை பயன்படுத்தி, காய்கறி மற்றும் பழ வகைகளை விளைவிக்க வேண்டும்,' என்றார்.

**நடமாடும் கால்நடை ஆய்வு மையம் துவக்கம் : நோயில்லா கால்நடைகளை உருவாக்க திட்டம்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 23,2011,00:11 IST

தஞ்சாவூர்: தஞ்சை அடுத்த அற்புதபுரத்தில் நடமாடும் கால்நடை ஆய்வுக்கூடம் துவக்கி வைக்கப்பட்டது.

தஞ்சை அடுத்த அற்புதபுரத்தில் தேசிய வேளாண்மை அபிவிருத்தி திட்டத்தில் கால்நடை பராமரிப்புத்துறை மூலம் செயல்பட உள்ள நடமாடும் கால்நடை ஆய்வுக்கூடத்தை கால்நடை பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குனர் ஜெயகுமார் துவக்கி வைத்து பேசியதாவது: தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தில் முன்னோடி திட்டமாக கால்நடை பராமரிப்புத்துறை மூலம் நடமாடும் கால்நடை ஆய்வுக்கூடம் புதிதாக துவங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் மாவட்டத்தில் ஐந்து கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டு அந்த கிராமங்களில் உள்ள அனைத்து கால்நடைகளும் நோயில்லா கால்நடைகளாக உருவாக்கும் பணி செயல்படுத்தப்பட உள்ளது. இதன் மூலம் அனைத்து கால்நடைகளுக்கும் நோய் எதிர்ப்பு தியை உருவாக்குவதற்கான அனைத்து வகை தடுப்பூசிகளும் உரிய கால அவகாசத்தில் போடப்படும்.

அதே போல, கால்நடைகளை தாக்கும் அனைத்து ஒட்டுண்ணிகளும் முழுமையாக அளிக்கப்படும். மேலும், குடற்புழு நீக்கம் பணி ஒவ்வொரு கால்நடையாக ஆய்வு செய்து அகற்றப்படும். இதற்காக திட்டம் துவங்கப்பட்டுள்ள கிராமத்தில் நடமாடும் ஆய்வுக்கூடம் மூலம் பரிசோதனைகள் உடனுக்குடன் செய்யப்பட்டு உரிய சிகிச்சைகள் வழங்கப்படும். சினை பிடிக்க தகுதியான பசுக்களுக்கு சினை ஊசி மூலம் கருத்தரிக்க நடவடிக்கை எடுக்கப்படும். அற்புதபுரத்தில் 321 மாடுகள், 420 ஆடுகள் தற்போது உள்ளது. இவை அனைத்தும் முழுமையாக பரிசோதனை செய்யப்பட்டு முழு நோய் எதிர்ப்பு தி உருவாக்கப்படும். இத்திட்டம் இக்கிராமத்தில் முழுமையாக செயல்படுத்தப்பட்ட பின் மற்ற கிராமங்களிலும் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு அவர் பேசினார்.
மாவட்ட பஞ்சாயத்து கவுன்சிலர் அருளானந்தசாமி, யூனியன் கவுன்சிலர் அண்ணாதுரை, பஞ்சாயத்து தலைவர் விஜயகுமார் ஆகியோர் பேசினர். கால்நடை பராமரிப்புத்துறை துணை இயக்குனர் அருள்மணி, உதவி இயக்குனர்கள் முகம்மதுகனி, கமல்ராஜ், கால்நடை நோய் புலனாய்வு திட்ட உதவி இயக்குனர் லூர்துசாமி, சிறப்பு மருத்துவர் மணிசந்திரன் ஆகியோர் பங்கேற்றனர்.

**கால்நடை வளர்ப்பில் ஆராய்ச்சி மையத்தின் அறிவுரை அவசியம்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 23,2011,00:08 IST

பந்தலூர் : பந்தலூர் அருகே ஏலமன்னாவில் கால்நடை இடுபொருட்கள் வழங்கும் விழா நடந்தது. தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம், சாண்டிநல்லா ஆடு இனவிருத்தி ஆராய்ச்சி நிலையம், ஏலமன்னா சி.டி.ஆர்.டி. நிறுவனம் சார்பில், கால்நடை இடுபொருட்கள் வழங்கும் விழா சி.டி.ஆர்.டி. வளாகத்தில் நடந்தது. ஆடு இனவிருத்தி ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் ஐயு வரவேற்றார். சி.டி. ஆர்.டி., செயல் இயக்குனர் ரங்கநாதன் பேசுகையில், ""மாவட்டத்தின் கடைகோடியில் உள்ள பந்தலூர் பகுதிக்கு அரசு அதிகாரிகள் வருவதே அரிதாக இருந்த நிலைமாறி, தற்போது அரசு மூலம் வழங்கப்படும் அனைத்து திட்டங்களும் துறை சார்ந்த அதிகாரிகள் மூலம் பயனாளிகளுக்கு நேரடியாக சேரும் வகையில் செயல்படுவது வரவேற்பை பெற்றுள்ளது," என்றார். கால்நடை உற்பத்தி கல்வி மையம், தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக இயக்குனர் முனைவர் தியாகராஜன் பேசுகையில், ""பொருளாதாரத்தை ஈட்டும் வகையில் இதுபோன்ற திட்டங்கள் செயல்படுத்தப்படுகிறது. கடுமையான முயற்சிக்கு பின்னர் இப்பகுதி மலைவாழ் மக்கள் மற்றும் பின்தங்கிய நிலையில் உள்ள சுய உதவிக் குழுவினருக்கு இத்திட்டம் பயனளிக்கிறது. ஆராய்ச்சி நிலையத்திலிருந்து இடுபொருட்களை பெற்று பயன்பெற வேண்டும் என்பதே இத்திட்டத்தின் நோக்கம்," என்றார். பயனாளிகளுக்கு இடுபொருட்களை வழங்கி, தமிழ்நாடு கால்நடை மருத்துவ

அறிவியல் பல்கலைக்கழக துணை வேந்தர் பிரபாகரன் பேசுகையில், ""மக்களோடு இணைந்து செயல்படும் வகையில் தொழில்நுட்ப ரீதியிலான திட்டங்கள் செயல்படுத்துவதே ஆராய்ச்சி மையத்தின் நோக்கமாகும். இதன் ஒரு கட்டமாக பொங்கல் வாரவிழா மற்றும் கால்நடை மற்றும் மீன்வள வார விழா நடத்தப்படுகிறது. மாநில அரசு பகுதி 2 திட்டமான முயல், கோழி மற்றும் செம்மறியாடு வளர்ப்பு மூலம் நீலகிரி மாவட்ட மலைவாழ் பெண்கள் மற்றும் சுய உதவிக்குழு பெண்களின் வாழ்க்கை தரம் மேம்படும். அதிக எடை, அதிக முட்டை ஆகியவற்றை பெற ஆராய்ச்சி மையத்துடன் தொடர்பு கொண்டு தொழில்நுட்பங்களை தெரிந்துக்கொண்டு வளர்க்க வேண்டும். இல்லாவிட்டால் முழு பலனும் கிடைக்காது. தற்போது வழங்கப்பட்டுள்ள இடுபொருட்களை வளர்ப்பது, எந்த நேரத்தில் என்ன மருந்து தருவது என்பது குறித்து ஆராய்ச்சி மையத்தின் நிர்வாகத்தின் மூலம் 3 மாதங்களுக்கு பயனாளிகளுக்கு பயிற்சியளிக்கப்படும். இதில், எந்த சந்தேகம் ஏற்பட்டாலும் உடனே சாந்தினல்லாவிலுள்ள ஆராய்ச்சி மையத்தை தொடர்பு கொண்டு தெளிவு பெறலாம்," என்றார். இணை பேராசிரியர் அனில்குமார் நன்றி கூறினார்.

தினத் தந்தி DAILY THANTHI வெல்க தமிழ்

## ***கொலக்கம்பை பகுதிகளில் வறட்சியால் இடம் பெயரும் வன விலங்குகள்***

*கொலக்கம்பை, ஜன.24–*

*கொலக்கம்பை பகுதியில் வறட்சியின் காரணமாக வன விலங்குகள் இடம் பெயர ஆரம்பித்துள்ளன. மேலும் வன விலங்குகள் குடியிருப்பு பகுதிகளுக்குள் புகுந்து உணவு தேடும் அபாயம் ஏற்பட்டுள்ளது.*

*அடர்ந்த வன பகுதிகள்*

*கொலக்கம்பை பகுதிகளை சுற்றிலும் அடர்ந்த வனப்பகுதி களும், தேயிலை தோட்டங் களும் அதிகமாக உள்ளன. இந்த வனப்பகுதிகளில் கரடி கள், காட்டெருமைகள், சிறுத்தைகள், குரங்கு கூட்டங் கள், காட்டு யானைகள், முயல், கடமான்கள், முள்ளம்பன்றிகள் உள்ளிட்ட பல்வேறு வகை யான வன விலங்குகள் வசித்து வருகின்றன.*

*இந்த வன விலங்குகள் உணவு தேடி குடியிருப்பு பகுதிகளுக்கும், விவசாய நிலங்களுக்கும் அடிக்கடி வருகின்றன. இந்த நிலையில் தற்பொழுது கொலக்கம்பை பகுதிகளில் நிலவும் கடுமை யான உறை பனியாலும், பகல் நேரங்களில் வெயிலின்*

தாக்கம் அதிகரித்து இருப்பதாலும் வனப்பகுதியில் உள்ள புற்கள் கருகி விட்டன.
இடம் பெயரும் வன விலங்குகள்
மேலும் நீரோடைகளில் நீர் வரத்து இன்றி வறண்டு உள்ளன. இதனால் வன விலங்குகள் உணவு மற்றும் தண்ணீர் தேடி குடியிருப்பு பகுதிகளுக்கும், விவசாய பகுதிகள், சாலைகள் ஆகிய பகுதிகளில் உலா வர தொடங்கி உள்ளன. மேலும் உணவு தேடி வன விலங்குகள் இடம் பெயர ஆரம்பித்து உள்ளன.
இதனால் சாலைகளில் வன விலங்குகள் வந்து செல்லும் போது வாகனங்களில் அடிபட்டு இறந்து விடு கின்றன. மேலும் சமூக விரோதிகள் விலங்குகளை வேட்டையாடவும், அதிகமாக வாய்ப்புகள் உருவாகி உள்ளன.
சாவு
கடந்த ஒரு மாதத்தில் மட்டும் 10–க்கும் மேற்பட்ட குரங்கு, முயல் போன்ற விலங்குகள் வாகனங்களில் அடிபட்டு இறந்து போன சம்பவம் நிகழ்ந்துள்ளன. எனவே வனத்துறையினர் வனப்பகுதிகளில் வன விலங்கு களுக்கு தேவையான தண்ணீர் வசதியை ஏற்படுத்தி தர நடவடிக்கை எடுக்க வேண்டும் என வன விலங்கு ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.
மேலும் தற்பொழுது கொடிய வன விலங்குகளான சிறுத்தை புலிகள், புலிகள் போன்றவை கொலக்கம்பை, தூதூர்மட்டம் சாலையில் இரவு நேரங்களில் அவ்வப் போது வந்து கொண்டு பொது மக்களை தாக்கும் அபாயமும் நிலவி வருகின்றன.
காட்டெருமைகள்
கடந்த 2 நாட்களுக்கு முன்பு புலி ஒன்று தூதூர்மட்டம் நகர் பகுதிக்கு அருகே வந்தது குறிப்பிடத்தக்கது. இதனை யடுத்து காட்டெருமை கூட்டங்களும் குடியிருப்பு களுக்குள் வந்து குடியிருப்பு களையும் சேதப்படுத்தி உள் ளது. இவ்வாறு வனப்பகுதியை விட்டு வெளியேறும் வன விலங்குகளை பொது மக்கள் யாரும் துன்புறுத்தவோ, தாக்கவோ கூடாது. உடனடி யாக வனத்துறை அதிகாரி களுக்கு தகவல் கொடுத்து ஒத்துழைக்குமாறு வனத்துறை யினர் கேட்டு கொண்டு உள்ளனர்.
வன விலங்குகள் தண்ணீர் மற்றும் உணவு தேடி இடம் பெயர ஆரம்பித்துள்ளதால் வனத்துறையினர் வன விலங்குகளுக்கு தேவையான தண்ணீரை வன பகுதிக்குள் ஏற்படுத்தி தர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சமூக ஆர்வலர்கள் எதிர்பார்த்து உள்ளனர்.

## முதுமலை வனப்பகுதிகளில் பூத்து குலுங்கும் இலை பொரசு மலர்கள்



முதுமலை பகுதியில் காட்டுத்தீ மலர்கள் என்று அழைக்கப்படும் இலை பொரசு மலர்கள் பூத்து குலுங்கி சுற்றுலா பயணிகளை கவர்ந்திழுக்கிறது.

*மசினகுடி, ஜன.24–*

*முதுமலை வனப்பகுதியில் தற்போது இலை பொரசு எனப்படும் காட்டு தீ பூக்கள் பூத்து குலுங்க ஆரம்பித்து உள்ளன. இந்த மலர்கள் கோடை காலத்தில் பூக்கும் தன்மை உடையது.*

*குளிர் காலம்*

*முதுமலை புலிகள் காப்பகத் தில் விலை உயர்ந்த தேக்கு மரங்களும் சுமார் 15–க்கும் மேற்பட்ட பல்வேறு வகை யான விலை உயர்ந்த மரங் களும் உள்ளன. ஓங்கி உயர்ந்த மரங்கள் மட்டுமின்றி பல்வேறு வகையான செடி, கொடிகளும் உள்ளன.*

*ஏராளமான வன விலங்கு கள் வாழ்ந்து வரும் இந்த முது மலை வனப்பகுதி மழை காலத்தில் பச்சை பசுமையாக காட்சியளிக்கும். ஆனால் குளிர் காலத்தில் கடும் உறை பனியால் வறண்டு காணப் படும்.*

*காட்டுத்தீ*

*கோடை காலத்தில் மரங்கள் அனைத்தும் இலைகள் இன்றி பட்டு போய் காணப்படும். இந்த காலங்களில் வனப்பகுதி வறட்சியினால் வறண்டு காட்டுத்தீ எளிதில் பரவும் நிலையில் காணப்படும். காட் டுத்தீ ஏற்பட்டால் அதனை கட்டுப்படுத்த தீத்தடுப்பு கோடுகளும் இந்த காலத்தில் அமைக்கப்படும்.*

*பனி பொழிவு*

*இதனிடையே தற்போது முதுமலையில் பனிப்பொழிவு காரணமாக வறண்ட கால நிலை காணப்படுகிறது. இதனால் வனப்பகுதி விரை வாக வறண்டு வருகின்றது. வறட்சி தொடங்கி இருந்தாலும் கோடை காலங்களில் மட்டுமே பூக்கும் தன்மை கொண்டு*

இலை பொரசு மலர்கள் பூத்து குலுங்குகின்றன.
இந்த மலர்களை தொலைவில் நின்று பார்க்கும் போது தீ ஜூவாலை போன்று காணப்படும். எனவே இந்த மலர்களை 'பிளேம் ஆப் தி பாரஸ்ட்' என்று ஆங்கிலத் திலும், காட்டுத்தீ பூக்கள் என்று தமிழிலும் அழைக்கி றார்கள்.
இளம் சிகப்பு மலர்கள்
இந்த இலை பொரசு மரங்கள் கோடை காலத்தில் மட்டுமே பூக்கள் பூக்கும். பூக்கும் காலங்களில் இந்த மரமானது அனைத்து இலை களையும் உதிர்த்தி விடும்.
இலைகளுக்கு பதிலாக மரத்தின் கிளைகள் முழுவதும் இளஞ்சிவப்பு மலர்கள் பூத்து குலுங்கும். இதனை தொலை வில் நின்று கண்டால் காட்டில் காட்டுத்தீ பிடித்து எரிவது போல் தெரியும்.
கொத்து கொத்தாக பூக்கும் இந்த மலர்களை ஏராளமான பறவைகள் வந்து அதில் உள்ள தேனை உறிஞ்சி செல்லும். முதுமலை புலிகள் காப்பகம், சிங்காரா, சீகூர் வனப்பகுதியில் மட்டுமே இந்த இலை பொரசு மரங்கள் அதிகமாக உள்ளன. இந்த மரங்கள் தற்போது பூக்க தொடங்கி உள்ளன. முது மலையில் பூத்துள்ள இந்த இலை பொரசு மலர்களை ஏராளமான சுற்றுலா பயணி கள் ஆர்வத்துடன் கண்டு செல்கின்றார்கள்.

மாலைமலர் BETA

**கோயம்பேட்டில் வெங்காயம் கிலோ ரூ.38க்கு குறைந்தது; தக்காளி கிலோ 25 ரூபாய்**

Chennai திங்கட்கிழமை, ஜனவரி 24, 11:25 AM IST



சென்னை, ஜன. 24-

சென்னையில் கடந்த 4 மாதமாக வெங்காயம், தக்காளி விலை அதிகமாக உயர்ந்திருந்தது. மழையின் காரணமாக விளைச்சல் பாதிக்கப்பட்டதால் வெங்காயம் ரூ.80 வரை விற்கப்பட்டது. இதே போல் தக்காளி ரூ.60 வரை விற்கப்பட்டது.

வெங்காயம் விலையை குறைக்க அரசு தீவிர நடவடிக்கை எடுத்த நிலையிலும் ரூ.50 வரை வெங்காயம் விற்கப்பட்டது. நடுத்தர பெரிய வெங்காயம் ரூ.40 வரை விற்கப்பட்டது. அதன் பிறகு மீண்டும் வெங்காயம் விலை ரூ.60 வரை உயர்ந்து விட்டது. தற்போது மழை காலம் முடிந்து வெயில் அடிக்க தொடங்கி விட்டதால் வெங்காய வரத்து அதிகமாக உள்ளது.

இதனால் விலை வேகமாக குறைந்து வருகிறது. கோயம்பேடு மார்க்கெட் வெங்காய மொத்த கடையான நீல்கிரிசில் முதல் ரக பெரிய வெங்காயம் கிலோ ரூ.38க்கு விற்கப்படுகிறது. அதற்கு அடுத்த ரகம் ரூ.26க்கு விற்கப்படுகிறது. சுமாரான பெரிய வெங்காயம் கிலோ ரூ.20க்கு கிடைக்கிறது. இதை சில்லறை கடைக்காரர்கள் வாங்கி கிலோவுக்கு ரூ.5 முதல் ரூ.10 வரை லாபம் வைத்து விற்பார்கள். தற்போது கோயம்பேடுக்கு அதிக அளவில் வெங்காயம் வருவதால் மேலும் விலை குறைய வாய்ப்புள்ளதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

இதே போல் தக்காளி கிலோ ரூ. 25 முதல் ரூ.28 வரை கோயம்பேட்டில் விற்கப்படுகிறது.